# தமிழரசு

1-1-1978 50 காசு.



# தீண்டாமையை ஒழிப்போம்!

"இந்தியாவில் அரிசனங்களை ஒதுக்கித்
தனியே விடப்பட்டுள்ள பெருங்கொடுமையைப்
பார்த்தால், இதற்குச் சமமான கொடுமை
உலகத்தில் எங்குமே இருந்ததில்லை
என்று சொல்லத் தோன்றுகிறது."

—அண்ணல் காந்தியடிகள்.



இக்கொடுமையை
ஒழிக்கப் பாடுபடுவதே
அண்ணல் காந்தியடிகளுக்கு
நாம் செய்யும்
நன்றிக் கடனாகும்!

வெளியீடு :— இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.


# தமிழரசு

1—1—1978

மலர் : 8 இதழ் : 13


## இந்த இதழில்...


| | பக்க எண் |
|---|---|
| பொற்காலம் காண ஒத்துழைப்பு நல்கிடுவீர் ! .. .. .. | 2 |
| எங்கும் தமிழ் ! எதிலும் தமிழ் ! .. | 3 |
| தமிழ்ப் பண்பாட்டைப் பாதுகாப்போம்! | 8 |
| வீடு செழிக்க நாடுநலம் பெற நவரையில் நெல் பயிரிடுவீர் ! .. | 9 |
| திரைப்பட விழா '78 .. .. | 17 |
| திரைப்படம் தோன்றிய வரலாறு .. | 20 |
| படமும் செய்தியும் .. | 23 |
| முதல்வர் பேசுகிறார் .. | 30 |
| குற்றவாளிகளைத் தண்டிக்காமல் சீர்திருத்தும் முறை .. .. | 33 |
| அரசினர் அச்சகம் வெளியீடுகள் விற்பனை நிலையம் .. .. | 36 |
| புயலே உணர்க ! .. .. .. | 41 |
| நூல் நயம் .. .. .. | 43 |
| முதன் முதலில் .. .. | 44 |
| திரைப்படத் தொழில் செழிக்க உதவும் நிறுவனங்கள் .. .. | 46 |
| 1978-ஆம் ஆண்டில் அரசு விடுமுறை நாட்கள் .. .. | 48 |

## நெகிழ்ச்சி தருவது கலை ! அதை நெறிப்படுத்துவது அரசியல் !

"கலை என்பது மக்களின் மனத்தில் நெகிழ்ச்சி ஏற்படுத்துவதாகும். எந்த நாட்டிலுமில்லாத முறையில் தமிழகத்தில் நெகிழ்ச்சியை உருவாக்க எடுத்துக்கொள்ளும் முயற்சி குறைவானது. அதிக முயற்சி இல்லாமல் தமிழக மாந்தர் நெஞ்சில் நெகிழ்ச்சியை ஏற்படுத்த முடியும். அதற்குக் காரணம் நெகிழ்ச்சி என்ற சொல்லில் சிறப்பு 'ழ' கரம் இருக்கிறது.

"தமிழிலிருந்து பல நாட்டவர்கள் எதை எதையோ எடுத்துக் கொண்டனர். பரத நாட்டியத்தைக் கூடக் கற்றுக் கொண்டனர். ஆனால் அந்த 'ழ' வை மட்டும் எடுத்துக் கொள்ள முடியவில்லை. அத்தகைய சிறப்பு 'ழ' கரம் இருக்கிற காரணத்தால், தமிழகத்துக் கலை மிக விரைவில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தி விடுகிறது.

"மனம் நெகிழச் செய்வது கலை !

"நெகிழ்ந்த மனம் நெகிழ்ந்து கொண்டே போனாலும் பயனில்லை. நெகிழாமல் இருந்தாலும் தவறு. ஆகவே மனம் நெகிழ வேண்டும் கலையால் ! அப்படி நெகிழ்ந்ததை வழிப்படுத்துவது—பயன் பெறச் செய்வது—அரசியல்!

"உள்ளத்தை நெகிழச் செய்யும் திறன் படைத்தவர்களிடமே—நெகிழ்ந்த உள்ளத்தை வழிப்படுத்தும் அரசியலும் இருந்தால் தவறு இல்லை. தவறு இல்லை என்பது மட்டுமல்ல —பொருத்தமிருக்கிறது; பொருளுமிருக்கிறது. இந்தக் கருத்துக்களை உலகம் உணர்ந்து நடக்கும் காலம் கனிந்து வருகிறது."

—பேரறிஞர் அண்ணா

# பொற்காலம் காண ஒத்துழைப்பு நல்கிடுவீர்!

வரலாறு காணாத வறட்சியும், கொடும்புயலும், பெரும் மழையும் அவற்றின் விளைவாய் பெருக்கெடுத்து ஓடிய வெள்ளமும் 1977-ஆம்ஆண்டின் நீங்கா நினைவுகளாக அமைந்துவிட்டன! 1978-ஆம் ஆண்டு பிறந்து விட்டது! இந்த ஆண்டாவது இயற்கையின் சீற்றம் இல்லாத இனிய ஆண்டாக அமையும் என்று நம்புகின்றோம்.

கடந்த 100 ஆண்டுகளில் காணாத கடும்புயல், கொடும் மழை, அதன் விளைவாய் ஏற்பட்ட பெரும் வெள்ளம் ஆகியவற்றினால் தமிழகத்தில் ஏறத்தாழ 200 கோடி ரூபாய் அளவுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது. புயல்-வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீரைத் துடைத்துக் கவலையைப் போக்கிட, தமிழ்நாடு அரசு உடனடியாக 100 கோடி ரூபாய் செலவில் நிவாரணப் பணிகளைத் துவக்கி, 'போர்க்காலப் பணிகளைப் போல்' விரைவாகச் செயல்படுத்தி வருகிறது. இப்பணிகள் செம்மையாகவும், சீக்கிரமாகவும் நடைபெற அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று அன்புடன் வேண்டுகின்றோம்.

புயல்-வெள்ள நிவாரண நிதிக்கு அனைத்துத் தரப்பினரும் அள்ளிக் கொடுத்து வருகின்றனர். அவர்களுக்கெல்லாம் தமிழ்நாடு அரசின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். தமிழகத்தின் புயல்-வெள்ள நிவாரண நிதிக்கு இதுவரை ஏறத்தாழ 3.5 கோடி ரூபாய் வசூலாகியுள்ளது. புயல்-வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இரத்தத்தின் இரத்தமான உடன் பிறப்புகளுக்கு நாம் அனைவரும் உதவுவது நம் கடமையாதலின், இதுவரை நிதி கொடுக்காமல் உள்ள அனைவரையும் உடனடியாக நிதி கொடுத்து உதவும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

தமிழகத்தில் உள்ள 4.5 கோடி மக்களும் ஆளுக்கொரு ரூபாய் வீதம் அளித்தால்கூட 4.5 கோடி ரூபாய் வசூலாகியிருக்க வேண்டும். ஆனால் அரசு வற்புறுத்தவில்லை என்பதால் பலர் நிதி கொடுக்காமல் உள்ளனர்; நிதி மிகுந்த பலர் தம்முடைய தகுதிக்கு ஏற்பக் கொடுக்காமல் குறைத்துக் கொடுத்துள்ளனர்! அவர்களெல்லாம் புத்தாண்டிலாவது மனம் கசிந்து அள்ளிக் கொடுத்து, புயல்-வெள்ளத்தால் அல்லற்பட்டோரின் கண்ணீரைத் துடைத்துக் கவலையைப் போக்கிடும் தமிழ்நாடு அரசின் அரும்பணிக்கு உதவிட வேண்டும் என்று அன்புடன் வேண்டுகின்றோம்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், 1978-ஆம் ஆண்டு, தமிழகத்தின் மறுமலர்ச்சிக்கு-பொற்காலத்திற்கு-முதல் படியாக அமையும் என்று எதிர்பார்க்கலாம். எனவே, அரசின் ஆக்கப்பணிகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என்று அன்புடன் வேண்டுகின்றோம்

## " தமிழரசு "

''எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்!'' என்ற முதல்வரின் முழக்கத்துடன் புத்தாண்டு ''தமிழரசு'' இதழ் துவங்குகிறது. தமிழ்மணம் கமழத் துவங்கும் இவ்விதழில் திரைப்பட வரலாறு, குறிப்பாகத் தமிழக திரைப்படத்தின் வளர்ச்சி ஆகியவை பற்றிய சிறப்புச் செய்திகளும் இடம் பெற்றுள்ளன. மற்றும் பல சிறப்புக் கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. அரசுப் பத்திரிகைதானே என்று எண்ணாமல், அனைத்துத் தரப்பினரும் ஆர்வமுடன் வாங்கிப் படிக்கும் வகையிலும்-கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக அமையும் பாங்கிலும்-விரைவில் ''தமிழரசு'' இதழில் பல புதுமைகளைப் படைக்கவிருக்கின்றோம். எனவே, 'தமிழரசு' வாசகர்களும் முகவர்களும் (ஏஜெண்டுகள்) ''தமிழரசு'' இதழின் வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என்று அன்புடன் வேண்டுகின்றோம்.

## புத்தாண்டு வாழ்த்து

தமிழக மக்கள் அனைவருக்கும், சிறப்பாக 'தமிழரசு' வாசகர்களுக்கும், முகவர்களுக்கும் ''1978-ஆம் ஆண்டு மகிழ்ச்சிகரமானதாக அமையவும், ஒளிமயமான எதிர்காலம் பிறக்கவும் வாழ்த்துகின்றோம்.



# எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்!

—தமிழிசைச் சங்க விழாவில் முதல்வர் முழக்கம்.

இன்று, தமிழ் இசைச் சங்கம் 34 ஆண்டுகளைக் கடந்து வீறுநடை-வெற்றி நடை-போடுகிறது. தனது கடமையிலிருந்து வழுவாமல், சிறப்பாகப் பணி செய்து வருவதைப் பார்க்கும்போது பெருமைப்படுகிறேன். அதைத் தொடர்ந்து மற்றவர்களும் தமிழ் இசை வளரப் பாடுபடக் கேட்டுக்கொள்கிறேன்.

பதவியையும், பணத்தையும் வாழ்க்கையின் சுகபோகங்களுக்காக மட்டும் பயன்படுத்தாமல்-தன்னை உயர்த்திக் கொண்டால் மட்டும் போதும் என்று கருதாமல்-தமிழ் மொழி வளர, தமிழிசை வளர-நாட்டை, நாட்டு மக்களை உயர்த்த வழிகாட்டியவர்களை-அதற்கு முன்னின்று தமிழிசையைத் தொடங்கி வைத்தவர்களை-நாம் எல்லோரும் போற்றுகிறோம். நமது வருங்காலச் சந்ததியினரும் எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகும் பாராட்டுவார்கள். செட்டி நாட்டு அரசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களுக்கு நன்றி கூறுவார்கள்.

## தமிழிசைச் சங்கம் தோற்றுவிக்கப் பட்டது ஏன்?

தமிழுக்குச் சொந்தக்காரன் என்ற உரிமையோடு நான் இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ் மொழி-தமிழ் இசைக்குப் பாதுகாப்பு ஏற்படுத்த-பிற மொழிகளால் தமிழ்மொழி-தமிழ் இசை-பின்னுக்குத் தள்ளப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக-பிற மொழிகள் தமிழ்மொழி மேல்-தமிழ் இசை மேல்-மேலாதிக்கம் செலுத்தாமல் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான்-தமிழிசைச் சங்கம் ஏற்படுத்தப்பட்டது என்று கருதுகிறேன்.

நான் இப்படிக் கூறுவதில் தவறு இருந்தாலும் இல்லாவிட்டாலும் உண்மைக் காரணம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று எனது உள்ளத்தில் நம்பிக்கை எழுகிறது.

## அண்ணாமலை அரசரின் தமிழ்ப்பற்று

சிலரை மட்டும் ஈர்க்க என்று இல்லாமல் படித்தவர்கள், பாமரர்கள், எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் அனைவரையும் ஈர்க்கும் சக்தி இசைக்கு உண்டு.

அத்தகைய இசையின் வழியாக தமிழ் மக்களின் நெஞ்சங்களில் கொஞ்சம் கொஞ்சமாகத் தமிழ் உணர்ச்சியை-தமிழ்ப் பண்பாட்டை-ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தோடுதான் தமிழிசைச் சங்கம் தொடங்கப்பட்டது.

"இசையின் மூலம் எல்லோரையும் ஈர்க்க முடியும் என்பதை உணர்ந்து அந்த இசையைப் பயன்படுத்தத் தமிழிசைச் சங்கம் கண்ட, செட்டி நாட்டரசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் நுண்ணிய அறிவை—ஆற்றலை—தமிழ் மீது கொண்டுள்ள பிணைப்பை எண்ணி மகிழ்ச்சி கொள்கிறோம்.

"தமிழிசையைக் கேட்டு மகிழ்பவன் நான். தமிழ்மொழிக்காக, தமிழ்ச் சமுதாயத்திற்காக உழைத்தவர்கள், தியாகம் செய்தவர்கள், அதற்காகத் தமது இன்னுயிரையே இழந்தவர்கள், தமிழகத்தின் எல்லையைக் காக்கப் போராடியவர்கள், இப்படிப்பட்ட பெரியவர்களையும் இந்த நேரத்தில் நினைவு கூர்ந்து அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தமிழிசைக்காகப் பாடல்கள் இயற்றித் தந்த கவிஞர்களையும்-தாங்கள் ஒதுக்கப்படுவோம் என்று தெரிந்திருந்தும் அச்சப்படாமல் துணிந்து தமிழுக்குக் கடமையாற்ற வந்த கவிஞர் பெருமக்களையும்-இந்த நேரத்தில் நினைவு கூர்ந்து பாராட்டுத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

## இமயம் தோன்றுவதற்கு முன்தோன்றியது தமிழ் !

தமிழ் இசையைக் காப்பதில் என்ன அவ்வளவு அக்கறை? இது தேவைதானு?என்று சிலர் கேட்கலாம். பண்டைத் தமிழிலக்கியத்திலேயே தமிழிசையின் பெருமை குறித்தும்-அதன் வளர்ச்சி குறித்தும்-பாடல்கள் உள்ளன என்ற செய்தியினைச் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் குறிப்பிட்டதாக இங்கே தலைமை ஏற்கும் பெரியவர் கூறினுர்.

அப்படிப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழிசையை-செழுமை மிகுந்த தமிழிசையை மீண்டும் சொந்தம் கொண்டாட தமிழிசைச் சங்கம் 35 ஆண்டுகளுக்கு முன் தோன்றியது என்பதை எண்ணி மகிழ்ச்சி கொள்கிறேம். எனவே தமிழை-தமிழ் இசையைக் காப்பதில் ஏன் இவ்வளவு அக்கறை என்று கேட்க மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

தமிழ்மொழி எப்படி இருந்தது என்பதையும் நாம் இப்போது எண்ணிப் பார்த்திட வேண்டும். இமய மலை தோன்ருக் காலத்தில் தமிழகம் எப்படி இருந்தது என்ற வரலாற்றை உணர்ந்து தெரிந்தவர்கள், தங்களது அறிவாற்றலைத் தமிழக மக்கள் மனத்தில் பதிய வைத்திருக்கிறுர்களா என்பதையும் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

"இமயம் தோன்ருக்காலத்திற்கு முன்னரேயே குமரிக்கண்டம் இருந்தது என்ற வரலாற்றினை நாம் அறிகிறேம். அத்தகைய இமயம் தோன்ருக் காலத்திற்கு முன் தோன்றிய தமிழக மக்களின் நாகரிகத்தை - பண்பாட்டை - கலாச்சாரத்தை-எல்லாத் தமிழக மக்களிடமும் பரப்பி இருக்கின்றேமா என்பதையும் எண்ணிப் பார்த்திட வேண்டும்.

### முத்தமிழின் சிறப்பு !

தமிழுக்குச் சிறப்புச் சேர்ப்பது இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழாகும். நாம் ரசிக்கின்ற-கேட்டு மகிழ்கின்ற நாத ஒலியை-இசையை-ஒழுங்குபடுத்தி, சீர்படுத்தி வெளிப்படுத்துகிறுர்கள்.

வரிவடிவத்தில் உள்ள எழுத்துக்கள் வார்த்தைகளாகி, வர்க்கியங்களாகி, பாடலாக-இசையாக-ஒலியாக-வெளிப்படுகின்றன. அது நாடகமாகவும், கூத்தாகவும் மாறி நடித்துக் காட்டப்படுகிறது. இந்த முறையில் பெரியவர்கள் முத்தமிழை வளர்த்தார்கள்.

தமிழ் மக்கள் தங்கள் வரலாற்றை முழுமையாகத் தெரிந்து கொள்ள, கடமையாற்ற வேண்டிய பொறுப்பு அரசியலில் ஈடுபட்டவர்களுக்கு மட்டுமல்ல, அறிஞர் பெருமக்களுக்கும் உண்டு.

நம்மால் மதிக்கப்படுகிற, சிலரால் சில காலங்களில் ஒதுக்கப்பட்ட இசைப்பேரரசு தண்டபாணி தேசிகர் அவர்களை இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்கின்றேம். தமிழிசை பாடியதற்காக அவரைச் சங்கீத வித்வான் என்று ஏற்றுக் கொள்ள மறுத்தவர்களும் உண்டு. 'சங்கீதத்திற்கும் தமிழிசைக்கும் சம்பந்தமில்லை' என்று கூறியவர்களும் உண்டு. தமிழிசை பாடிடும் வித்வான்கள் எல்லாம் இரண்டாம் தரம் என்று பேசியவர்களும் உண்டு. இப்படிப் பட்ட கருத்துக்களைக் கேட்கின்ற நேரத்தில் நான் ஆத்திரப் பட்டது கூட உண்டு.

### தமிழர்கள் வாழ்வில் இரண்டறக் கலந்தது இசை !

"இசை தமிழர்களுக்குப் புதுமையானது அல்ல! தமிழர்களின் வாழ்க்கையில் இரண்டறக் கலந்தது இசை. இசையை இரவல் வாங்கிப் பாட வேண்டிய அளவிற்குத் தமிழர்கள் எந்தக் காலத்திலும் இருந்திருக்கவில்லை என்பதைத் தான் நமக்கு வரலாறு எடுத்துக் கூறுகிறது.

இங்கே சின்னஞ்சிறு இளவல்-இளந் தளிர்-நாதஸ்வர இசையைத் திறமையாக வாசித்ததை அனைவரும் கேட்டு மகிழ்ந்து கைதட்டி வரவேற்றதைப் பார்த்தோம்.

### ஆங்கிலேயர்க்கு அச்சம் தந்த படம்

தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துவதற்காக 1935-ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட ஏகநாதரின் வரலாற்றுக்கு 'மகாத்மா' என்று தலைப்புக் கொடுத்திருந்தார் அதன் டைரக்டர் திரு வி. சாந்தாராம். அப்போது இந்தியாவை ஆட்சி செய்து வந்த ஆங்கில அரசின் தணிக்கைக் குழுவினர் அந்தப் படத்திற்குப் பல்வேறு ஆட்சேபணைகளைத் தெரிவித்ததுடன், 'மகாத்மா' என்ற தலைப்பு உலக உத்தமர் காந்தியடிகளின் நினைவைப் பொது மக்களுக்கு ஏற்படுத்தும் வகையில் அமைந்திருக்கிறது எனக் கருதி, தலைப்பையே மாற்ற வேண்டும் என்றும் கட்டளையிட்டனர். அதன் காரணமாக அப்படம் 'தர்மாத்மா' என்று பெயர் சூட்டப்பட்டுத் திரையிடப்பட்டது.

நாதஸ்வர இசையில் புலமை பெற்றவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வருகிறுர்கள். ஒரு காலத்தில் இன்னுர்தான் இந்த நாதஸ்வர இசையை வாசிக்க வேண்டும் என்ற நிலைமை இருந்தது. இன்று அந்த நிலைமை மாறிவிட்டது.


இங்கே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் நாடகத்தில் நடித்துக் கொண்டிருந்த காலத்தில், தவுல் மீனுட்சி சுந்தரம் பிள்ளை போன்றவர்கள்-நாதஸ்வரக் கலையில் நம்மால் பாராட்டப் பெற்றவர்கள் எல்லாம் கூட-பல்லக்கில் அலங்கரிக்கப்பட்ட சுவாமி ஊர்வலமாகக் கொண்டு செல்லப்படுகிற நேரத்தில் இரவு முழுவதும் சுவாமி பல்லக்குக்கு முன்னே நாதஸ்வரம் வாசித்ததை நான் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன்.

மீனுட்சி சுந்தரம் பிள்ளை போன்றவர்கள் எல்லாம் தவுலைத் தூக்கிக்கொண்டு,

நடந்து கொண்டே வாசித்து மக்களை மகிழ்வித்து இந்தக் கலையை வளர்த்த காலம் உண்டு. இன்று அந்த நிலைமை மாறி விட்டது.

இப்போது, நாதஸ்வர இசையை வளர்ப்பதில் ஈடுபட்டிருந்த குடும்பங்கள் கூட இந்தத் தொழிலை மறந்து மற்றவர்களைப் போலத் தங்கள் பிள்ளைகளும் படித்துப் பட்டம் பெற்று வேலை பார்க்கின்ற நிலையில் வர வேண்டும் என்று எண்ணுகிறார்கள்.

எனவே, கோயில்களில் ஓதுவார்கள் தமிழ் இசைமூலம் பக்தியைப் பரப்பினாலும் சரி! ''எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் நிறை'' 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற கருத்தைப் பரப்பினாலும் சரி மக்கள் கோயில்களுக்குச் செல்லும்போது 'தமிழ், தமிழ் என்ற இனிமையான ஒலி கேட்க வேண்டும்!' என்ற ஆசை— பேரவா இந்த அரசுக்கு உண்டு!



சென்னை அண்ணாமலை மன்றத்தில், 23-12-1977 அன்று நடைபெற்ற, தமிழிசைச் சங்கத்தின் 35-வது ஆண்டு விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள், நாதஸ்வர வித்வான் திருவீழிமிழலை திரு எஸ். நடராஜ சுந்தரம் பிள்ளை அவர்களுக்கு "இசைப் பேரறிஞர்" என்ற பட்டம் வழங்கி, பொன்னாடை போர்த்தினார்.

'நாதஸ்வர இசை, குலத்தொழில் ஆகக் கூடாது என்ற கருத்தை வலியுறுத்துவதில் மற்றவர்களைப் போல நான் முன்னால் நிற்கிறேன்.

## நாதஸ்வரம் கற்போருக்கு மாதம் 500 ரூபாய்!

நெஞ்சில் தொடங்கி, நாக்கில் தவழ்ந்து மூச்சை அடக்கி வெளிப்படும் நாதம்தான் நாதஸ்வரம். தங்கள் உயிர் மூச்சைத் தந்து மக்களை மகிழ்விக்கிற நாதஸ்வரக் கலையைக் காப்பாற்றத் தமிழக அரசு விரும்புகிறது.

படிப்புக்குக் குந்தகம் ஏற்படாமல் நாதஸ்வரக் கலையை முறையாகப் பயில ஆர்வமிக்கவர்கள் யார் முன் வந்தாலும் அவர்களுக்குத் தேவைப்படுகிற வசதியைத் தமிழக அரசு செய்து கொடுக்கும். அவர்களுக்கு மாதா மாதம் உதவித் தொகை ரூபாய் 500/-க்குக் குறையாமல் கொடுக்கத் தமிழக அரசு உத்தேசித்துள்ளது.

## தமிழ்நாடு அரசின் பேரவா!

இதைப்போல, கோயில்களில் இசையின் மூலம் பக்தியைப் பரப்பி வந்த ஓதுவார்கள், இன்றைய தினம் குறைந்து கொண்டே வருகிறார்கள் என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது.

எந்தெந்தக் கோயில்கள் என்று இல்லாமல், எல்லாக் கோயில்களிலும் நாத வெள்ளம் மக்கள் உள்ளத்தைக் கவர வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

## தமிழ் வளரப் பேரறிஞர் அண்ணா கூறிய வழி!

தமிழிசையைக் காப்பாற்ற வேண்டும் என்று கூறுகிற அதே நேரத்தில் ஒன்றை உயர்த்தி, ஒன்றைக் குறைத்துக் கூறுகிறோம் என்று அர்த்தமல்ல!

1942-ம் ஆண்டு விக்டோரியா மெமோரியல் ஹாலில் ஆர். கே. சண்முகம் செட்டியாரும், செட்டி நாட்டு அரசரும், அமரர் பேரறிஞர் அண்ணா அவர்களும், மற்றும் பெரியவர்களும் தமிழ் இசையைப் பற்றி விவாதித்தார்கள்.

அப்பொழுது தமிழ் வளர தமிழ் இசை காக்கப்பட வேண்டும் என்ற கருத்தை அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் வலியுறுத்தினார்கள்.

## புதிய பாடல்களைப் புனைவோருக்கு 5000 ரூபாய் பரிசு !

புதிய புதிய பாடல்கள் தமிழிசையில் சேர்க்கப்பட வேண்டும் என்று தமிழக அரசு விரும்புகிறது. சிறந்த புதிய தமிழ்ப்பாடல்களைப் புனையும் கவிஞர் பெருமக்களைப் பாராட்டி அவர்களை மகிழ்விக்கும் முறையில், இசை வல்லுநர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து அதன் மூலம் சிறந்த பாடல்களைத் தேர்ந்தெடுக்கும். அதனை இயற்றிய கவிஞர்களுக்கு ரூபாய் 5 ஆயிரம் பரிசு வழங்கத் தமிழக அரசு உத்தேசித்துள்ளது.

## புதிய இராகங்களைப் படைப்போரையும் அரசு ஊக்குவிக்கும்!

இசையில் எத்தனையோ இராகங்களை வைத்திருக்கிறார்கள். மேலும் புதிய புதிய இராகங்களைக் கண்டு, மக்களுக்கு அளித்து, இசையைச் செழுமைப் படுத்த வேண்டும் என்று இசைப் பேரறிஞர்களைக் கைகூப்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

கர்நாடக சங்கீதத்தின் வரைமுறைகளை மீறுமல் புதிய இராகங்களைத் தருகிற இசைப் பேரறிஞர்களையும் இந்த அரசு ஊக்குவிக்க விரும்புகிறது.

## நமது உரிமை

'நம்முடை உணர்வை வெளிப்படுத்த எந்த மொழி தாய்மொழியோ—சொந்த மொழியோ — அதைப் பயன்படுத்துகிறோம். அந்த மொழியை வளர்ப்பதற்கும் பாதுகாப்பதற்கும் நமக்கு உரிமை உண்டு.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இசைக் கலையைப் பயில்கிறவர்கள் கல்வி பயிலாமல், இசைக் கலையை மட்டும் கற்பது என்றால் அதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்.

இசையைக் கற்கின்ற அதே நேரத்தில், மொழியை - அறிவியலை - வரலாற்றை - இலக்கியத்தைக் கற்க வேண்டும். இரண்டையும் சேர்த்து கற்கச் செய்யப் பெற்றோர்கள் அக்கறை காட்ட வேண்டும்.

## மொழிப்பற்று இல்லாதவர்கள் முன்னுக்கு வர முடியுமா?

'எந்த நாட்டிலும் மொழிப் பற்று இல்லாதவர்கள் முன்னுக்கு வந்ததாக வரலாறு உண்டா? மொழி என்பது ரத்தத்தோடு ரத்தமாகக் கலந்த உணர்வாகும்.

மொழியைக் காப்பாற்றும் பணியில் நமக்கு எத்தனை எத்தனையோ சோதனைகள் ஏற்படலாம்!

பலர் நம்மைக் குறை சொல்லலாம். ஆனால் நாம் தொடர்ந்து அந்தப் பணியைச் செய்தால், வருங்கால சந்ததி நம்மைப் பாராட்டத் தயங்காது என்பதையும் இங்கே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

## சினிமாவினால் கர்நாடக சங்கீதம் சீர்குலைந்தா ?

சினிமா வந்த பிறகுதான் கர்நாடக சங்கீதம் கெட்டுவிட்டது, வடநாட்டு, மேல் நாட்டுப்பணி சங்கீதம் இங்கே ஊடுருவி விட்டது என்று சிலர் குறை கூறுகிறார்கள்.

சினிமாத்துறையில் தியாகராஜ பாகவதர், பி. யு. சின்னப்பா போன்றவர்கள் இருந்தபோது, வடநாட்டு-மேல்நாட்டு சங்கீத பாணி தமிழ்த் திரைப்படத் துறையில் தலை காட்டவில்லை!

எப்போது மேல்நாட்டு, வடநாட்டு சங்கீதம் நுழைந்தது என்பதைப் பார்க்க வேண்டும். பாபநாசம் சிவன் போன்ற பாடலாசிரியர்கள் சினிமாத் துறையில் இருந்த போது கர்நாடக மெட்டுகளில் பாடல்கள் இருந்தன.

இவர்கள் எல்லாம் திரைப்படத் துறையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விலகியதால் தான், மேல்நாட்டு பாணி சங்கீதம் தமிழ்த் திரைப்படத் துறையில் நுழைந்தது.

## பெரியவர்களின் பொறுப்பு !

பெரியவர்கள் எல்லாம் நமக்கு ஏன் இந்த வம்பு, நமக்குத்தான் வயதாகி விட்டதே என்று ஒதுங்கிக் கொள்வதனால்தான், இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

நாட்டுக்கு, மொழிக்கு, எது நல்லது என்பதைப் பெரியவர்கள் சொல்லாமல் இருப்பார்களேயானால், அது, இந்த நாட்டுக்குப் பேரிழப்பாகும்.

'தமிழிசை வளர வேண்டும். அதன் தனித்தன்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்று நீங்கள் பாடுபடுவீர்களேயானால்—போராடுவீர்களேயானால் உங்கள் பக்கம் தமிழக அரசு நிற்கும்.

## அண்ணல் பார்த்த திரைப்படம்!...

தேசத் தந்தை காந்தியடிகள் பார்த்து ரசித்த திரைப்படம் ''ராம்ராஜ்யா" ஆகும். பிரேம் அடிப்—ராமராகவும், சோபனு சம்ரத்—சீதையாகவும் நடித்த இந்த இந்திப்படம் பல வருடங்களுக்குப் பிறகு ஏ. வி. எம். நிறுவனத்தால் தமிழில் 'டப்பிங்' செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

**

பெரியவர்கள் நமக்கு ஏன் இந்த வம்பு என்று ஒதுங்காதீர்கள். உங்கள் அனுபவமும், ஆலோசனையும் தமிழகத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படும்.

## தமிழ் மொழியை அழிய விட மாட்டோம்!

**தமிழ் மொழியை அழியவிட மாட்டோம். அதைப்பாதுகாப்போம். இது நம் அனைவரது கடமையாகும். இந்த உணர்வு கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வருகிறது. இதை நாம் தடுத்து நிறுத்தியாக வேண்டும்.**

**"எங்கும் தமிழ், எதிலும் தமிழ்" என்று எல்லாத் துறைகளிலும் தமிழ் மொழி வளர நாம் பாடுபட வேண்டும்.**

ஒரு மொழி வளர வேண்டும் என்று கூறும் போது இன்னொரு மொழி அழிய வேண்டும் என்று பொருளல்ல. ஒரு நோயாளி குணமாக வேண்டும் என்று சொல்லும்போது இன்னொருவர் இறக்கட்டும் என்று அர்த்தமல்ல.

**நாங்கள் எங்கள் மொழியை வளர்க்க—காப்பாற்ற—விரும்புகிறோம். அதே நேரத்தில் இன்னொரு மொழி வளரக்கூடாது என்று நாங்கள் கூறவில்லை. அவரவர்களுக்குச் சொந்த மொழி எந்த மொழியோ, அதை அவர்கள் வளர்க்க நாங்கள் தடையாக இருக்க மாட்டோம்.**

**தமிழகத்தில் தாய்மொழியை வளர்க்க நாங்கள் விரும்புகிறோம். தமிழக அரசு, தமிழிசை வளர வேண்டும் என்று விரும்பினால் இன்னொரு மொழிக்கு எதிராக அல்ல.**

நிகழ்ச்சி சிறப்பாக அமையவேண்டும் என்பதற்கு அடையாளமாக, இளம்தளிர் கலைஞர் இதைத் தொடங்கி வைத்திருக்கிறார்.

**எனவே, தமிழிசை பூத்துக் குலுங்கி, காய்த்துக் கனியும் என்று நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.**

*[சென்னை அண்ணாமலை மன்றத்தில், 23-12-1977 அன்று நடைபெற்ற தமிழிசைச் சங்கத்தின் 35-வது ஆண்டு விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் ஆற்றிய உரையில் சில பகுதிகள்.)*

## திரைப்பட வடிவம் பெற்ற காவியங்கள்!

**புராணக் கதைகள், சமுகக் கதைகள் ஆகியவற்றைத் தயாரித்து வெளியிட்டுள்ள தமிழ்த் திரை உலகம், புகழ்பெற்ற காவியங்களையும் படமாக்கத் தவறவில்லை. அவற்றில் சில இங்கே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.**

| காவியத்தின் பெயர் | | திரைப்படத்தின் பெயர் |
|---|---|---|
| மனோன்மணீயம் | — | மனோன்மணி |
| சாகுந்தலம் | — | சகுந்தலை |
| பெருங்கதை | — | உதயணன் வாசவதத்தா |
| சிலப்பதிகாரம் | — | கண்ணகி |
| மணிமேகலை | — | மணிமேகலை |
| வளையாபதி | — | வளையாபதி |
| குண்டலகேசி | — | குண்டலகேசி |
| இராமாயணம் | — | சம்பூர்ண இராமாயணம் |
| மகாபாரதம் | — | மகாபாரதம் |

## செய்திப்படம் பிறந்த கதை!

**முதன் முதலாகச் செய்திப் படங்களைக் கண்டுபிடித்தவர் ஒரு பிரெஞ்சுக்காரர். தற்செயலாக ஒரு வீடு தீப்பற்றிக் கொண்டு எரியும்போது இவர் படம் பிடித்தாராம். அது ஒரு செய்தி! அதிலிருந்து செய்திப் படம் தயாரிக்கும் எண்ணம் அவருக்கு உதித்தது. 1927-ல் தான் பேசும் செய்திப்படம் முதன் முதலாகத் தோன்றியது. 'பாக்ஸ் மூவிடோன்' என்னும் கம்பெனி இன்று உலகில் சிறந்த செய்திப் படக் கம்பெனியாகத் திகழ்கிறது.**

**சினிமா—அதிலும் செய்திப் படங்கள்—நமது தேசத்தின் நிரந்தரமான செல்வம்.**

**—ரூஸ்வெல்ட்,**

# தமிழ்ப் பண்பாட்டைப் பாதுகாப்போம்!

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க மாநாட்டில் கலந்து கொள்ள மலேசியா, இலங்கை, சிங்கப்பூர், பிரான்ஸ், பிஜி, மொரிஷியஸ், தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து வந்திருந்த பிரதிநிதிகளுக்குத் தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் ஒரு விருந்தளித்தார்.

மாண்புமிகு தமிழகச் செய்தி சுற்றுலாத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் வெளிநாட்டுப் பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசினர்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் திரு இரா. நா. வீரப்பன், தமிழ்நாடு அரசாங்கம் செய்த ஏற்பாடுகளுக்கு நன்றி தெரிவித்துப் பேசினர்.

பொதுச்செயலாளர் திரு கனகரத்தினம் (இலங்கை) தமிழக அரசுக்கு இலங்கை மக்களின் சார்பில் நன்றி தெரிவித்தார்.

மலேசியாவைச் சேர்ந்த கவிஞர் அப்பலவாணன், வெளிநாட்டுப் பேராய்வாளர்களின் சார்பில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு ரூ. 501 வழங்கினர்.

தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் திரு முனு ஆதி அவர்களும், சட்ட அமைச்சர் திரு நாராயணசாமி முதலியார் அவர்களும், உணவு அமைச்சர் திரு எட்மண்ட் அவர்களும் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு பொன்னையன் அவர்களும், கைத்தறித்துறை அமைச்சர் திரு ராஜா முகமது அவர்களும் பாராட்டு விழாவில் கலந்து கொண்டார்கள்.

**தமிழ்ப் பண்பாட்டைப் பாதுகாப்போம் !**

விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் பேசியதாவது:

''தமிழர் நாகரிகமும் பண்பாடும் தொன்மையானது என்பது மட்டும் அல்ல, தலை சிறந்ததாகவும் இன்று வரை விளங்கி வருகிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். தாய் மொழியால் உணர்ந்து, வரலாற்றின் அடிப்படையில் அறிந்து உயிர்த் துடிப்புடன் தங்கள் பண்பாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்று உருவான கருத்துதான் பண்பாடாக அமைந்து இருக்கிறது.

''இதனை அனைத்து நாட்டு மக்களும் அவரவர் மொழியின் மூலமாக உணர்ந்து வரலாற்றின் மூலமாக அறிந்து உயிர்த் துடிப்புடன் தங்கள் பண்பாட்டைப் பாதுகாத்து வருவதை நாம் அறிவோம். தமிழைப் போற்றுகின்ற—தமிழை வளர்க்கின்ற — தமிழுக்குச் சொந்தக்காரர்களாகிய நாம் ஒரு மித்து உணர்வோடு ஒரு மாநாட்டை ஏற்பாடு செய்து நம்முடைய கருத்துக்களைப் பகிரங்கமாக எடுத்து வைப்போம். விவாதங்களை உயிர்த் துடிப்பு உள்ளவைகளாக்குவோம். முடிவாக, திட்ட வட்டமான ஒரு கருத்தினை மக்களுக்கு எடுத்துச் சொல்வோம். நம்முடைய பண்பாட்டு அடிப்படையில் அந்தக் கருத்தினை எடுத்துச் சொல்ல இங்கே கூடி இருக்கிறோம். இப்படிப் பண்பாட்டைப் பேணுகிற முயற்சியில் நாம் தீவிர அக்கறை காட்ட வேண்டும் என்ற உள்ளம் இங்குள்ள எல்லோருக்கும் உண்டு.

''மொரிஷியஸ் தீவில் உள்ளவர்கள் தமிழ் மொழியைச் சரியாகப் படிப்பதற்கும், படித்தவற்றைச் சரியாகச் சொல்லிக் கொடுப்பதற்கும் வாய்ப்பு இல்லாத காரணத்தால் அங்கிருந்து இருவரைத் தமிழகத்திற்கு அனுப்பி வைத்தால் அவர்களுக்குத் தமிழ் மொழி அறிவைக் கொடுத்து சிறந்த ஆசிரியர்களாக உருவாக்கித் தமிழ் மொழியை வளப்படுத்த திரும்ப அங்கு அனுப்புகிறேன் என்று சொல்லி இருக்கிறேன். இந்த முயற்சி விரைவில் செயல்படுத்தக் கூடியதாக இருக்கும் என்று நம்புகிறேன்.

''வெளிநாட்டில் உள்ள தமிழ்ப் பேராய்வாளர்கள் பண்பாட்டு அடிப்படையில் ஆனலும் சரி, மொழி அறிவியல் துறையின் அடிப்படையில் ஆனலும் சரி தமிழகத்திற்கு வர விரும்பினல், இங்கே மாநாடு நடத்த விரும்பினல் தயவு செய்து ஆட்சியினரோடு தொடர்பு கொள்ளுங்கள்.

''சிறு சிறு அமைப்புகள் மூலமாக நடத்த முயலும்போது சில சிரமங்கள் ஏற்படுகின்றன.

"அப்படிப்பட்ட அமைப்புகளுக்கு வசதிக் குறைவுகள் இருக்கும். பணம்—இடம் — பொருள்—வசதி ஆகியவை மிகவும் தேவைப்படுவதால் அந்த அமைப்புகளால் சிறப்பாகக் காரியங்கள் ஆற்ற முடியாமல் போகலாம்.

''அதனல்தான் அரசின் ஆதரவுடன் இப்படிப்பட்ட நல்ல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

''இந்த அரசின் ஆதரவு தமிழர்களின் நலனை—பண்பாட்டைக் காப்பதற்கு எப்போதும் இருக்கிறது.

''தமிழகத்திலே இருக்கும் இந்த அரசு தமிழ் மக்கள் நலனை-உணர்வுகளைக் காப்பதில் உறுதியாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்!''

இவ்வாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கூறினர்.



# வீடு செழிக்க நாடு நலம் பெற நவரையில் நெல் பயிரிடுவீர்!

வரலாறு காணாத வகையில் கடந்த நவம்பர் மாதத்தில் வீசிய கடும் புயலாலும், பெய்த பெரும் மழையாலும், அதன் காரணமாக ஏற்பட்ட பெரும் வெள்ளத்தாலும் தமிழகத்தில் ஏறத்தாழ 4.5 இலட்சம் ஏக்கரில் பயிரிடப் பட்டிருந்த நெற்பயிர் சேதமுற்றுள்ளது. இதனால், தமிழகத்தின் மொத்த நெல் உற்பத்தி யில் ஏறத்தாழ 4.5 இலட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தி குறையக்கூடும். ஆனால் வரலாறு காணாத வகையில் இந்த ஆண்டில் தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் உள்ள ஏரி, குளங்கள், நீர்த்தேக்கங்கள், அணைகள் ஆகியவை நிரம்பி வழிகின்றன! குறிப்பாகச் சென்ற ஆண்டில் வறண்டு கிடந்த இராமநாத புரம் மாவட்டத்தில் மட்டும் இந்த ஆண்டில் ஏறத்தாழ 7 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்ய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது! மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து இந்த ஆண்டு மார்ச்சு 10-ஆம் தேதி வரை பாசனத்திற்குத் தண்ணீர் விடப்படும் என்று தமிழக அரசு அறிவித் துள்ளது. இதைப் பயன்படுத்தி தஞ்சை, திருச்சி, தென்னார்க்காடு, சேலம் ஆகிய மாவட்டங்களில் சுமார் 4 இலட்சம் ஏக்கரில் நவரைப் பட்டத்தில் (ஜனவரி முதல் ஏப்ரல் வரை) நெல் பயிரிட வாய்ப்பு உள்ளது. அதுபோல் மற்ற மாவட்டங் களிலும் நவரைப் பட்டத்தில் நெல் பயிரிட வாய்ப்பு உள்ளது.

இயற்கை ஒருபக்கம் இன்னல் விளைவித் தாலும் மறுபக்கம் பாசன ஆதாரங்களிலெல்லாம் நீரை நிரம்பச் செய்து நன்மை செய்துள்ளது! இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, அரசு தரும் சலுகைகளையும் பயன்படுத்தி **குறைந்தது 10 இலட்சம் ஏக்கரில் நவரைப்பருவத்தில் நெல் பயிரிட முடியும். இதன் மூலம் நவரைப்பட்டத் தில் மட்டும் குறைந்தது 20 இலட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்ய முடியும்.**

*இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி உழவர் பெருமக்கள் நவரைச் சாகுபடி யில் ஈடுபடுவது, வீட்டுக்கும் நாட்டுக்கும் அவர்கள் செய்ய வேண்டிய கடமை யாகும்.*

குன்றென நெல் மகசூல் குவித்திட, நவ ரைப் பருவமே (ஜனவரி முதல் ஏப்ரல் வரை) மிகமிகச் சிறந்தது என்பது ஆராய்ச்சி, அனு பவம் ஆகிய இரண்டின் அடிப்படையாகவும் தெரிய வருகிறது. மப்பும், மந்தாரமுமான வானமும், குறைவான சூரிய ஒளியும் கொண்ட

முன்பருவத்தை (Khariff season) விட, தெளிவான வானமும், நிறைந்த சூரிய ஒளியும் கொண்ட பின்பருவத்திலேயே (Rabi Season) உயர் விளைச்சல் ரகங்கள், உயர்ந்த அளவு மகசூலைத் தருகின்றன. இதற்குக் காரணம் மூன்று. அவை:

(1) நவரைப் பருவ நெற்பயிரின் கடைசி 45 நாட்களில் துல்லியமான (பிரகாசமான) சூரிய ஒளி நிறையக் கிடைப்பதால், ஒளிச் சேர்க்கை நன்கு நடைபெற்று, நெல்லின் பூங்கொத்துக்களில் (Panicles) உள்ள பூமொட்டுகள் (Spikelets) அனைத்திலும் மாவுப் பொருள்கள் நிரம்பி (பால் பிடித்து) தானியமணிகள் நன்கு திரண்டு முதிர்ச்சி அடைகின்றன.

(2) நவரைப் பருவத்தில் மழை இல்லாத காரணத்தால் பாசன நீரைக் கட்டுப்படுத்த முடிகிறது. இதனால் நெற்பயிரின் ஆரம்ப கால வளர்ச்சி, தூர் கிளைப்பு ஆகிய இரண்டும் துரிதமாகவும், துடிப்பாகவும் நடைபெற்று, மகசூலை உயர்த்துவதற்கு முதற்காரணமாக உள்ள பயன்தரு பூங்கொத்துகள் ஏராளமாகத் தோன்றுகின்றன.

(3) நவரைப் பருவத்தில் வானம், மப்பும் மந்தாரமும் இன்றித் தெளிவாக இருப்பதாலும் காற்றில் ஈரம் குறைவாக இருப்பதாலும், நவரைப் பருவ நெற்பயிர்களைப் பூச்சிகளும், நோய்களும் அதிகம் தாக்குவதில்லை.

இம்மூன்று காரணங்களாலேயே, நவரைப் பருவத்தில், 'அதிசய நெல்' எனப்படும் 'ஐ. ஆர். 8' ரக நெல் ஏக்கருக்கு 3 முதல் 3.28 மெட்ரிக் வரை (எக்டேருக்கு 7.5 முதல் 8.2 மெட்ரிக் டன் வரை) மகசூல் கொடுத்துள்ளது. சில முன்னோடி உழவர் பெருமக்கள் நவரைப் பருவத்தில் 'ஐ. ஆர். 8' பயிரிட்டு ஏக்கருக்கு 4 மெட்ரிக் டன்னுக்கும் அதிகமான மகசூல் பெற்றுள்ளனர். எனவே, நெல் உற்பத்தியைப் பெருக்கிட நவரைப் பருவத்தில் நல்ல வாய்ப்புகள் உள்ளன என்பது தெளிவாகிறது.

எனவே, தண்ணீர் வசதியுள்ள இடங்களில் நவரைப் பருவத்தில் உயர்விளைச்சல் தரும் ரகங்களைப் பயிரிட்டு, பயன்மிகப் பெற்று வளமோடு வாழுமாறு தமிழக உழவர் பெருமக்களைக் கேட்டுக்கொள்வதுடன், நவரைப் பருவத்தில் நெல் உற்பத்தி செய்யவிருக்கும் தமிழக உழவர் பெருமக்களுக்கு உயர்ந்த நெல் மகசூல் பெறும் நுட்பங்கள்' 'நெல் உற்பத்தியைப் பெருக்கும் முறைகள்' ஆகிய இரண்டையும் ''தமிழரசு'' இதழின் காணிக்கையாக, ஈண்டு படைத்துள்ளோம்.

**உயர்ந்த நெல் மகசூல் பெறும் நுட்பங்கள் :**

நெல் சாகுபடியில், மிகமிக உயர்ந்த அளவு மகசூல் பெறுவதற்குப் பின்கண்டவை காரணங்களாக உள்ளன.

**(1) குறிப்பிட்ட பரப்பில் தோன்றும் பூங்கொத்துக்களின் (Panicles) எண்ணிக்கை.**

**(2) ஒவ்வொரு பூங்கொத்திலும் உள்ள பூமொட்டுக்களின் (Spikelets) எண்ணிக்கை.**

**(3) முதிர்ச்சி அடையும் மணிகளின் சத வீதம்.**

(4) தனி ஒரு நெல்லின் சராசரி எடை (1,000 நெல்லின் எடை).

ஒரு சதுர மீட்டர் பரப்பளவில் 400 பூங்கொத்துக்கள் தோன்றி, அவை ஒவ்வொன்றிலும் சராசரியாக 100 நெல் மணிகள் முதிர்ச்சி அடைந்து, 1,000 நெல் மணிகளின் எடை 20 முதல் 22 கிராம் எடை என்ற அளவில் இருந்தால், ஒரு ஏக்கரில் இருந்து சராசரியாக 3.25 மெட்ரிக் டன் முதல் 3.5 மெட்ரிக் டன் வரை மகசூல் பெறமுடியும் என்பது ஆராய்ச்சிகளின் மூலம் தெரிய வருகிறது. ஆனால் 1972-73-ஆம் ஆண்டின் புள்ளி விவரப்படி தமிழ்நாட்டின் சராசரி ஏக்கர் நெல் உற்பத்தி 800 கிலோ (எக்டேருக்கு 1,999 கிலோ) என்ற அளவிலேயே உள்ளது. எனவே, சராசரி ஏக்கர் உற்பத்தியைப் பெருக்க, மேற்கூறிய நான்கையும் அதிகப்படுத்த வேண்டியது இன்றியமையாததாகும். அவ்வாறு அதிகப்படுத்தப் பின்கண்ட 4 முறைகளையும் மேற்கொள்ள வேண்டும்.


1. ஒரு சதுர மீட்டர் பரப்பில் தோன்றும் பூங்கொத்துக்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த, போதிய அளவு இரசாயன உரத்தை அடியுரமாக இடுவதுடன், பயிரின் ஆரம்ப காலத்திலேயே போதிய அளவில் மேலுரமிட வேண்டும்.

2. பூங்கொத்தில் பூ மொட்டுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த, பூங்கொத்து உருவாகும் தருணத்தில், தழைச்சத்தை அல்லது தழைச்சத்து, மணிச்சத்து ஆகிய இரண்டையும் சேர்த்து மேலுரமாக இடவேண்டும்.

3. பூங்கொத்தில் ஏராளமான பூமொட்டுகள் நசித்துக் காணப்படுவதைத் தவிர்க்க, பூங்கொத்து வெளியே தோன்றுவதற்கு 15 நாட்கள் முன்பாக மேலுரமிட வேண்டும்.

4. முதிர்ச்சி அடைந்த மணிகளின் சத வீதம் குறைவாக இருப்பதற்கு, பூங்கொத்து உருவாகுதல் முதல் பூங்கொத்து வெளியே தோன்றுதல் வரையான காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தவறான சாகுபடி நிருவாகமே காரணமாகும். இதைத் தவிர்க்க, பூங்கொத்து உருவாகுதல் முதல் பூங்கொத்து வெளியே தோன்றுதல் வரையான காலத்தில் போதிய பாசன வசதி அளிக்க வேண்டும். தேவையானால் பூ நிறைந்த சமயத்தில், மேலுரமும் இடவேண்டும்.

உயர்ந்த மகசூலுக்கு வழிகோலும் மேற்கூறிய 4 அடிப்படைகளுள், ஒரு சதுரமீட்டரில் தோன்றும் பூங்கொத்துகளின் எண்ணிக்கையே குறிப்பிட்ட ரகத்தில் மகசூல் வேறுபாட்டிற்கு மூலகாரணமாக உள்ளது. எனவே, உயர்ந்த மகசூல் பெறுவதற்கு மூலகாரணமாக உள்ள பூங்கொத்துக்களின் எண்ணிக்கை, பூமொட்டுகளின் எண்ணிக்கை, முற்றும் மணிகளின் சத வீதம், மணிகளின் எடை ஆகிய நான்கையும் அதிகப்படுத்த, பின்கண்ட 6 வழிகளையும் ஒருங்கிணைத்து நெல் சாகுபடி செய்யவேண்டும்.




# நெல் உற்பத்தியைப் பெருக்க 6 வழிகள்

**1. நவரைப் பருவத்திற்கு ஏற்ற நெல் ரகங்களில், பொருத்தமானதைத் தேர்ந்தெடுத்துப் பயிரிடுதல்.**

ஆராய்ச்சி மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் பின்கண்ட ரகங்களை நவரைப் பருவத்தில் பயிரிடுமாறு பரிந்துரைக்கின்றோம்.

| வரிசை எண். | ரகத்தின் பெயர் | வயது (நாட்கள்) | பயிரிடுவதற்கு ஏற்ற மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1. | ஐ.ஆர். 8 | 135 | செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், சேலம், கோவை, தருமபுரி. |
| 2. | பவானி | 135 | கோவை, இராமநாதபுரம், தருமபுரி, மதுரை, சேலம் |
| 3. | வைகை | 115 | தென் ஆர்க்காடு, வடஆர்க்காடு. |
| 4. | ஜெயா | 125 | செங்கற்பட்டு, வட ஆர்க்காடு. |
| 5. | ஐ.ஆர். 20 | 125 | செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், சேலம், கோவை, தருமபுரி. |
| 6. | ரத்னா | 120 | செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, திருச்சி. |
| 7. | காஞ்சி | 107 | |
| 8. | காவேரி | 105 | ” |
| 9. | அன்னபூர்ணா | 105 | எல்லா மாவட்டங்களுக்கும் (நீலகிரி தவிர) |
| 10. | கண்ணகி | 103 | ” |
| 11. | கரிகாலன் | 110 | தஞ்சாவூர். |
| 12. | ஆடுதுறை—31 | 105 | செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, திருச்சி, சேலம், கோவை, தருமபுரி, தஞ்சாவூர். |
| 13. | டி. கே எம்.-6 | 115 | ” |
| 14. | கோ.—29 | 110 | ” |
| 15. | டி. கே. எம்.-7 | 108 | செங்கற்பட்டு, வட ஆர்க்காடு. |

மேற்கூறிய விவரங்களில் இருந்து, உங்களுக்குப் பொருத்தமான ரகத்தைத் தேர்ந்தெடுத்துப் பயிரிடுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றோம்.



2. பயிர்களின் எண்ணிக்கையைப் போதிய அளவில் இருக்கச் செய்தல்

குறிப்பிட்ட பரப்பில், போதிய அளவு எண்ணிக்கையில் பயிர்களை இருக்கச் செய்ய பின்கண்டவாறு நாற்று விடுதல், நடவு வயல் தயாரித்தல், நடவு செய்தல் ஆகியவைகளில் கவனம் செலுத்த வேண்டும்.

அ. நாற்று தயாரித்தல்

1. ஜனவரி 1 முதல் 15 ஆம் தேதிக்குள் நாற்று விட்டால் நவரைப் பருவ நெல்லில் உயர்ந்த மகசூல் பெறலாம்.

2. இதுவரை மேற்கொள்ளப் பெற்ற பரிசோதனைகளில் இருந்து சேற்று நாற்றங்கால் (Wet-Nursery) அமைப்பதே சிறந்தது எனத் தெரிய வருகிறது. ஒரு ஏக்கர் நடவு செய்ய 8 சென்ட் பரப்பில் நாற்றங்கால் அமைக்க வேண்டும்.

3. நாற்றங்காலுக்கு ஏக்கருக்கு 10 வண்டி தொழு எரு அல்லது கலவை எரு இட வேண்டும்.

4. நாற்றங்காலுக்கு 1 சென்ட் பரப்புக்கு 2 கிலோ 'டை-அமோனியம் பாஸ்பேட்' அல்லது 7.2 கிலோ 'சூப்பர் பாஸ்பேட்'+ 1.5 கிலோ யூரியா வீதம் இடுவது சிறந்தது.

5. ஒரு சென்ட் நாற்றங்காலுக்கு 3 கிலோ விதை வீதம், விதைப்பது சிறந்தது.

6. ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் 'பிளிட் 406' மருந்து அல்லது அக்ரசான் மருந்து வீதம் கலக்க வேண்டும்.

7. துத்தநாக சல்பேட்டை சென்ட்டுக்கு 60 கிராம் வீதம், மணலுடன் கலந்து, விதைப்பதற்கு முன்பு இடுவதால் மகசூல் பெருகும்.

8. ஒரு சில சென்டிமீட்டர் உயரம் வரை நாற்று வளர்ந்த பிறகு, நாற்றங்காலில் குறைந்த அளவு தண்ணீர் நிற்கச் செய்ய வேண்டும்.

9. நாற்று நன்கு வளராமல் இருந்தால் நாற்றுப் பறிப்பதற்கு ஒரு வாரம் முன்பாக, ஒரு சென்ட் நாற்றங்காலுக்கு அரை கிலோ அமோனியம் சல்பேட் வீதம் தூவ வேண்டும்.

10. நாற்றுவிட்ட 10-வது நாளிலும், 20-வது நாளிலும், ஒரு ஏக்கர் நாற்றங்காலுக்கு 200 மில்லி லிட்டர் 'பாரத்தியான்' மருந்தை 200 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்க வேண்டும்.

ஆ. நடவு வயல் தயாரித்தல்

1. நடவு வயலை, நடுவதற்கு 15 நாட்கள் முன்பாகவே போதிய அளவில் உழுது சேறுக்க வேண்டும்.

2. நிலத்தின் அடியில் தண்ணீர் வடிவதையும் ( Percolation ) களைகள் முளைப்பதையும் குறைத்திடுவதற்கு மீண்டும் மீண்டும் உழவேண்டும்.

3. நடவு வயலுக்கு ஏக்கருக்கு 10 வண்டி தொழு எரு அல்லது கலவை எரு அல்லது 5 வண்டி தழை எரு வீதம், நடுவதற்கு 10 முதல் 15 நாள் முன்பாக இடவேண்டும்.

4. அடி உரமாக இரசாயன உரத்தை இடுவதற்கு முன்பாகவே, நிலத்தைச் சமப்படுத்துவதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு செய்வது, ஒரே மாதிரியாகப் பயிர்கள் வளரவும், பாசன நீரை முறையாகக் கட்டுப்படுத்தவும் உதவிடும். நடுவதற்கு முன்பாக நிலத்தைச் சமப்படுத்துவதற்குச் செய்யும் செலவை, சமப்படுத்துவதனுல் கிடைக்கும் அதிக மகசூலில் இருந்து பெறமுடியும்.

5. கடைசி உழவு செய்வதற்கு முன்பாக அடியுரத்தை இட வேண்டும். ஆனல் அடியுரமிடுவது, நடுவதற்கு முன் 1 முதல் 3 நாட்களுக்கு மேற்படக்கூடாது.

6. அடியுரமிட்ட நாளிலிருந்து நடவு செய்யும் நாள்வரை, வயலில் தண்ணீர் நிற்க வேண்டும்.

இ. நடவு செய்தல்

1. அதிக மகசூல் பெற, நாற்றுக்களை 4 முதல் 5 இலையாக உள்ளபொழுது (விதைத்த 20 முதல் 25 நாளில்) நட்டுவிட வேண்டும். (வளர்ப்பு 7711-ன் நாற்றுகளை 18 முதல் 20 நாட்களில் நட்டுவிடுதல் சிறந்தது).

2. ஒரு பங்கு சூப்பர்பாஸ்பேட், ஒரு பங்கு மண், இருபங்கு தண்ணீர் ஆகிய மூன்றும் கலந்த கலவையில் நாற்றுகளின் வேர்ப் பகுதியை நனைத்து நடவு செய்ய வேண்டும்.

3. தூர் அதிகமாகக் கிளைக்க குறுகிய கால வயதுடையதும், குட்டையானதுமான ரகங்களை வயலில் 1.5 முதல் 2 சென்டி மீட்டர் ஆழத்தில் மேலோட்டமாக நடவேண்டும்.

4. நடும்பொழுது ஒவ்வொரு தூரிலும் 3 பயிர் இருக்குமாறு நடவேண்டும்.

5. உயர்ந்த மகசூல் பெறவும், எளிதில் களையெடுக்கவும் வரிசைக்கு வரிசை 15 சென்டி மீட்டர் (6 அங்குலம்) இடைவெளியும், வரிசையில் தூருக்குத் தூர் 10 சென்டி மீட்டர் (4 அங்குலம்) இடைவெளி விட்டு நடுவது சிறந்தது.



6. நடவு செய்த 10-ஆம் நாள் ஏக்கருக்கு 4 கிலோ வீதம் 'நீலப்-பச்சைப் பாசி' இடுவது சிறந்தது. இவ்வாறு செய்வது 25 கிலோ தழைச்சத்து இடுவதற்குச் சமமாகும்.

7. நடப்பட்ட பயிர்கள் இறப்பதைத் தடுக்க, நடவு செய்த வயலுக்கு நடவுசெய்த 3 முதல் 5 நாட்களுக்குள் இலேசாகத் தண்ணீர் பாய்ச்சுதல் சிறந்தது.

**3. காலத்திலும், போதிய அளவிலும் நட்வு வயலுக்கு இரசாயன உரமிடுதல்**

இதுவரை மேற்கொள்ளப் பெற்ற ஆராய்ச்சி மற்றும் அனுசரணை ஆராய்ச்சி ஆகியவைகளின் முடிவுகளையும், இரசாயன உரப்பற்றுக்குறை நிலைமையையும் கருத்திற் கொண்டு பின்கண்டவாறு இரசாயன உரமிடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

**அ. இரசாயன உர அளவு (ஏக்கருக்கு)**

| | தழைச் சத்து | மணிச் சத்து | சாம்பல் சத்து |
|---|---|---|---|
| | (கிலோவில்) | | |
| **1. குட்டையான ரகங்கள்** | | | |
| (1) ஐ.ஆர். 8, ஜெயா ........ | 50 | 25 | 25 |
| (2) ஐ.ஆர். 20, ரத்னா, பவானி, காஞ்சி, காவேரி, கரிகாலன், கண்ணகி, வைகை, அன்னபூர்ணா ........ | 40 | 20 | 20 |
| (3) ஐ. ஆர். 8, ஜெயா (மதுரை மாவட்டத்திற்கு) | 60 | 30 | 30 |
| **2. நெட்டையான ரகங்கள்** | | | |
| ஆடுதுறை-31, கோ. 29, டி.கே.எம். 6, டி.கே.எம். 7 ........ | 30 | 15 | 15 |

**ஆ. இரசாயன உரமிடும் காலம் :—**

**அடியுரம்**

பரிந்துரைக்கப்பட்ட அளவு தழைச்சத்தில் பாதியையும், மணிச்சத்து சாம்பல், சத்துக்களின் முழு அளவையும் அடியுரமாக இட வேண்டும்.

**மேல் உரம்**

மீதியுள்ள பாதி தழைச்சத்தைப் பின் கண்டவாறு இட வேண்டும்.

(1) கெட்டியான களிமண் நிலங்களுக்கு ஒரே தடவையாக தூர்கிளைக்கும் உச்சக் கட்டத்தில் மேலுரமிடவேண்டும்.





# குழந்தைகளுக்குத் தேவை சத்தான உணவு பயிர்களுக்குத் தேவை விஜய்



குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எல்லாச் சத்துக்களும் அவசியம். அதுபோலவே பயிர்களின் வளர்ச்சிக்குத் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மூன்றையும் அளித்தால்தான் முழுப் பலனைப் பெறலாம்.

இம் மூன்று சத்துக்களையும் ஒருங்கே கொண்டவை விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்கள். உங்கள் பயிர்களுக்கும் நிலங்களுக்கும் ஏற்றவாறு சத்துக்களை அளிக்க விஜய் 17-17-17, விஜய் 14-28-14 காம்ப்ளெக்ஸ் ரகங்கள் உங்களுக்கு இப்போது கிடைக்கின்றன. விஜய் உரங்கள் நவீன முறையில் தயாரிக்கப்பட்டு, நன்கு பரிசோதிக்கப்பட்ட தரமான உரங்களாகும்.

தரமான விஜய் உரங்களைத் தயாரிப்பது, இந்தியாவின் மிகப்பெரிய உரத் தொழிற்சாலைகளில் ஒன்றான மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்.

உங்கள் பயிர்களுக்கு விஜய் உரங்களைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெறுவதற்கான சாகுபடி முறைகளை அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி, இலவச வெளியீடுகளைப் பெறுங்கள்.

ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், தென்னூர், திருச்சி 620 017

VIJAY
MADRAS FERTILIZERS




MFL-1517

(2) நடுத்தர மண் நிலங்களுக்கு 2 தடவைகளில் மேலுரமிட வேண்டும். தூர் கிளைக்கும் உச்சக்கட்டத்தில்முதல் முறையும், பூங்கொத்து உருவாகும் தருணத்தில் இரண்டாவது முறையும் மேலுரமிட வேண்டும்.

(3) இளகிய மண் நிலங்களுக்கு 3 தடவைகளில் மேலுரமிட வேண்டும். தூர் கிளைக்கும் உச்சக் கட்டத்தில் முதல் தடவையும், பூங்கொத்து உருவாகும் தருணத்தில் 2-வது தடவையும், பூங்கொத்து வெளியே தோன்றும் தருணத்தில் 3-வது தடவையும் மேலுரமிட வேண்டும்.

**4. களைகளைக் கட்டுப்படுத்தல்**

நடவு வயலுக்கு இட்ட இரசாயன உரத்தை இழுத்துக் கொள்வதில் நெற்பயிர்களுடன் களைகள் போட்டியிடுகின்றன. மேலும் பூச்சிகள் மற்றும் நோய்கள் வாழ்வதற்கு உதவும் மாற்றுப் பயிராகவும் களைகள் இருக்கின்றன. எனவே, காலத்தில் களையெடுக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

**5. தகுந்த நீர்ப்பாசன நிருவாகத்தை மேற்கொள்ளல்**

முறையான பாசன நிருவாகத்தை மேற்கொண்டால் பின்கண்ட பயன்கள் ஏற்படுகின்றன.


(1) தூர்கள் கிளைக்கும்.

(2) இடப்பட்ட தழைச்சத்து சேதமாகாமல், பயிர்களுக்குக் கிடைக்கும்.

(3) களைகள் கட்டுப்படுத்தப்படும்.

(4) மொத்தம் தேவைப்படும் தண்ணீரின் அளவு குறையும். எனவே, பாசன நிருவாகத்தில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

நெல்லைப் பொறுத்தவரையில், உச்சக் கட்ட தூர் கிளைப்புக் காலத்திலிருந்து, நெல் மணிகள் உருவாகும் காலம் வரை (பால் பிடிக்கும் தருணம்) தண்ணீர்த் தட்டுப்பாடே இருக்கக்கூடாது. அப்பொழுது தண்ணீர்த் தட்டுப்பாடு இல்லாதிருந்தால்தான், எந்த ரகமும், மகசூல் தரும் தன்மையை முழு அளவில் வெளிப்படுத்தும்.





எனவே, பின்கண்ட பாசன நிருவாகத்தை மேற்கொள்வது சிறந்தது.

(1) நடவு செய்யும்போது வயலில் 1 முதல் 2 சென்டிமீட்டர் ஆழ தண்ணீர் நிற்க வேண்டும். பிறகு வயலில் 2.5 சென்டிமீட்டர் (1 அங்குலம்) தண்ணீர் நிற்க வேண்டும். நடவு செய்த 15-வது நாள் தண்ணீரை வடிக்கலாம். ஆனால் வயலை வெடிக்க விடக்கூடாது.

(2) பயிர், பச்சை கட்ட ஆரம்பித்த பிறகு, வயலில் 2 அங்குல ஆழத்திற்குத் தண்ணீர் நிற்கச் செய்வது அவசியம்.

(3) மேலுரமிடுவதற்கு முதல் நாளே வயலில் இருந்து தண்ணீரை வடித்து விட வேண்டும். மேலுரமிட்ட 24 மணி நேரத்தில் மீண்டும் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

(4) அறுவடை செய்வதற்கு ஒரு வாரம் முன்பாக வயலில் உள்ள தண்ணீரை வடித்து விட வேண்டும்.

**6. பூச்சிகள், நோய்கள் ஆகியவற்றின் தாக்குதலில் இருந்து பயிர்களைக் காப்பாற்றுதல்**

நோய் வந்தபின் தடுப்பதை விட, நோய் வரும் முன்பே தடுப்புச் செய்வதே சிறந்தது.

துப்புரவான சாகுபடி, பருவத்தில் நடுதல், காலத்தில் களையெடுத்தல் ஆகியவை நல்ல திடமான பயிர்கள் அமையவும், மேலும் பூச்சிகள் மற்றும் நோய்களின் தாக்குதலில் இருந்து தப்பிக்கவும் உதவும். பூச்சிகள் அல்லது நோய்கள் தோன்றிய உடன், காலத்தில் மருந்தடித்தால், அவைகளை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தி விடலாம். காலங் கடந்து மருந்து தெளிப்பதையும், பொருத்தமற்ற மருந்தைத் தெளிப்பதையும், குறைவான அல்லது அதிகமான அடர்த்தியில் மருந்து தெளிப்பதையும் தவிர்க்கவேண்டும். வேளாண்மைத் துறையினர் பரிந்துரைக்கும் முறையில் பயிர்ப்பாதுகாப்பு முறைகளை மேற்கொள்வதே, உயர்ந்த மகசூலுக்கு வழிகோலும்.

**வேண்டுகோள்**

மேற்கூறிய 6 முறைகளையும் ஒருங்கிணைத்து, நவரைப் பருவத்தில் நெல் பயிரிட்டால், குறைந்தது ஏக்கருக்கு 2 மெட்ரிக் டன் மகசூலும், உயர்ந்த அளவாக ஏக்கருக்கு 3 மெட்ரிக் டன் வரை மகசூலும் பெற முடியுமாதலின், இந்த 6 முறைகளிலும் தீவிர கவனம் செலுத்தி, நவரைப் பருவத்தில் நெல் பயிரிட்டு, பயன்மிகப் பெற்று, வளமோடு வாழும்படி தமிழக உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

—ஆர். மாணிக்கம்.



கோ-ஆப்டெக்ஸ் அளிக்கும்
காஞ்சிபுரம் பட்டுச் சேலை
தங்கத்துக்கு நிகரானது!
ஆம்! காஞ்சிபுரம் பட்டுச் சேலைக்கு தங்க நிகர் மென்மை எழிலூட்டுவது கோ-ஆப்டெக்ஸ். பற்பல டிசைன்கள். அசல் சரிகை. அணிபவருக்கு எழில் கூட்டும் கண்கவர் வண்ண வகைகள்.
மற்றும் ஆரணி, கும்பகோணம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம் கைத்தறி நூல் சேலைகள், சுங்கடி பிரிண்டுகள், சின்னாளப்பட்டி சேலைகள்.
கைத்தறியே வண்ணத்துப்பூச்சி
கோ-ஆப்டெக்ஸ்
ஆடை அணிபவர் அதன் தனிச்சிறப்பை அறிவர்.
பண்டைச் சிறப்பும் நவீன நளினமும் இணைந்து திகழ்வது வண்ணத்துப்பூச்சி

# திரைப்பட விழா 78

Filmotsav 78
MADRAS

அனைத்து நாட்டுத் திரைப்பட விழாவை நடத்தும் வாய்ப்பு, முதன்முதலாக இப்போதுதான் தென் இந்தியாவிற்குக் கிடைத்துள்ளது. இந்த அரிய வாய்ப்பும் முதன்முதலாகத் தமிழ்நாட்டிற்கே கிடைத்துள்ளது என்பது பெருமைக்குரிய ஒன்றாக உள்ளது. அனைத்து நாட்டுத் திரைப்பட விழா, சென்னையில் 1978, ஜனவரி 3-ஆம் நாள் துவங்கவிருக்கிறது. இத்திரைப்பட விழாவில் 35 நாடுகள் கலந்து கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னையில் நடைபெறவிருக்கும் அனைத்து நாட்டுத் திரைப்பட விழாவை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தலைமையில் மாண்புமிகு மத்திய தகவல் ஒலி பரப்புத் துறை அமைச்சர் திரு எல். கே. அத்வானி அவர்கள் துவக்கி வைப்பார்.

வெளிநாடுகளிலிருந்து சுமார் 70 திரைப்படங்களுடன், 50 பிரதிநிதிகளும் இவ்விழாவில் கலந்து கொள்வார்கள். இது தவிர இத்திரைப்பட விழாவில் 25 வெளிநாட்டு திரைப்பட வர்த்தகப் பிரதிநிதிகள் கலந்து கொள்வர். இத்திரைப்பட விழாவில் திரையிடப்படக் கூடும் என்று எதிர்பார்க்கப்படும் திரைப்படங்களில் 'மார்ட்டின் ஸ்கோர் ஸெஸே', 'ரெய்னர்வெர்னர்', 'பாஸ்பிண்டர்', 'ஸோல்டான் பப்ரி', 'அக்னஸ் வார்டா', 'ஐவோ திவோரெக்', 'இஸ்த்வான் ஸஜாவோ', 'கிளாபர் ரோச்சா', 'ஷுஜி தெரயாமா' போன்றபுகழ்பெற்றதிரைப்படத் தயாரிப்பாளர்களின் திரைப்படங்களும் இடம் பெற்றுள்ளன. இவை தவிர புகழ்பெற்ற இந்தியத் தயாரிப்பாளர்கள் சமீபத்தில் தயாரித்துள்ள திரைப்படங்கள், சில புதிய திரைப்பட இயக்குநர்களின் திரைப்படங்கள் ஆகியவை உட்பட சுமார் 30 இந்தியத் திரைப்படங்கள் இத் திரைப்பட விழாவில் திரையிடப் படவிருக்கின்றன.

அனைத்து நாட்டுத் திரைப்பட விழாவிற்கு வரும் திரைப்படங்களைத் திரையிடுவதற்காக சென்னை நகரில் 8 திரை அரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்

'ஷிகா டா சில்வா' என்னும் பிரேசில் நாட்டுத் திரைப்படத்தில் ஒரு காட்சி.



டுள்ளன. வர்த்தக ரீதியான திரைப்படங்கள் தேவி, தேவி பாரடைஸ், ஈகா, சத்யம், கலை வாணர் அரங்கம், முரளி கிருஷ்ணு ஆகிய அரங்குகளில் திரையிடப் படவிருக்கின்றன. 'அபிராமி' திரைப்பட அரங்கில், பத்திரிகை யாளர்களுக்காகத் திரையிடப் படும். 'சபையர்' திரைப்பட அரங்கில் இந்தியப் படக்காட்சிக் காகத் திரையிடப்படும். வர்த்தக ரீதியான திரைப்பட அரங்கங் களுக்கான டிக்கட்டுகளின் விலை ரூபாய், 15, ரூபாய் 10, ரூபாய் 5 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தியப் படக் காட்சிக்கான டிக் கட்டுகள் விலை ரூபாய் 7, ரூபாய், 5, ரூபாய் 3 என நிர்ணயிக்கப் பட்டுள்ளது. முதல் வாரத்திற் கான சீசன் டிக்கட்டுகளின் விற் பனை டிசம்பர் மாதம் 14-ஆம் தேதி துவங்கியது. இரண்டாவது வாரத்திற்கான டிக்கட்டுகளின் விற்பனை டிசம்பர் மாதம் 23-ஆம் தேதி துவங்கியது.



'நிக்கலோடியன்' (யூ. கே.) என்னும் திரைப்படத்தில் ஒரு காட்சி.

'பிப்த் சீல்' என்னும் ஹங்கேரி நாட்டுத் திரைப் படத்தில் ஒரு காட்சி.




இந்திய திரைப்பட ஏற்றுமதி கார்ப்பரேஷன் ஒரு திரைப்பட அங்காடியை நடத்தவிருக்கிறது. இந்த அங்காடிக்கு இந்தியா விலிருந்தும் வெளிநாடுகளிலிருந் தும் சுமார் 120 படங்கள் வரு கின்றன. திரைப்பட விழா நடக்குமிடத்தில் 25 விற்பனை அரங்குகள் அமைக்கப்படும். ஆப் கானிஸ்தான், சோவியத் ரஷ்யா, ஸ்ரீலங்கா, நேபாளம் ஆகிய நாடுகள் உட்பட சுமார் 23 நாடு களின் விற்பனை ஏஜன்சி நிறு வனங்களின் தலைவர்கள் இந்தத் திரைப்பட அங்காடியில் கலந்து கொள்வதற்காக அழைக்கப் பட்டுள்ளனர்.

'திரைப்பட விற்பனையில் யுக்திகள்' பற்றிய இரண்டு நாள் கருத்தரங்கு ஒன்றும் அதனைத் தொடர்ந்து நடத்தப்படவிருக் கும் திரைப்படத் தயாரிப்பு முறைகள் மற்றும் செலவு பற்றிய மாநாடும் இத்திரைப்பட விழா வின் சிறப்பு அம்சங்களா கும். இந்தக் கருத்தரங்கை இந்தியத் திரைப்பட சங்கம், தென்னிந்திய திரைப்பட வர்த் தக சபை ஆகியவை நடத்தும். ஜனவரி 5, 6, 7 தேதிகளில் இக் கருத்தரங்கு நடைபெறும். பல் கலைக்கழகங்கள், டெலிவிஷன் மற்றும் வர்த்தகத் தொகுதிகளில் திரைப்படங்களை விற்பனை செய் வது பற்றிய பிரச்சினைகள்—குறிப் பாக புதிய விற்பனை வழிவகை களைக் கண்டுபிடிப்பதற்கான அவசியம் ஆகியவற்றைப் பற்றி இக்கருத்தரங்கில் விவாதிக்கப் படும்.

25 ஆண்டுகளுக்கு முன்பு 1952-ம் ஆண்டில் இந்தியாவின்





'லேஸ் மேக்கர்' என்னும் ஸ்விட்சர்லாந்து திரைப்படத்தில் ஒரு காட்சி.

முதல் அனைத்து நாட்டுத் திரைப்பட விழா பம்பாயில் சுமார் இரண்டு வாரங்கள் நடைபெற்றது. அதற்குப் பிறகு பல இடங்களில் இவ்விழா நடத்தப்பட்டது. சென்னையிலும்கூட சில நாட்கள் அந்த விழா நடைபெற்றது. அப்போது ''தி ரிவர்''(ஆறு), 'தி பால் ஆப் பெர்லின் (பெர்லின் வீழ்ச்சி) போன்ற மறக்க முடியாத திரைப்படங்கள் திரையிடப்பட்டன.

தற்பொழுது சென்னையில் நடைபெறவிருக்கும் திரைப்பட விழாவில், சென்னையிலுள்ள திரைப்பட ரசிகர்களுக்கென்றே முதலாவதாகச் சில படங்கள் திரையிடப்படுகின்றன. தென் மண்டலத்தில் நடைபெறும் முதலாவது திரைப்பட விழாவாகும் இது.

மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தைச் சேர்ந்த திரைப்பட விழா இயக்குநர் அகம், திரைப்பட நிதியுதவி கார்ப்பரேஷனோடு சேர்ந்து, தமிழ்நாடு அரசு, இந்தியத் திரைப்படத் தொழில் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இத்திரைப்பட விழா நடத்தப்படுகிறது.

# திரைப்படம் தோன்றிய வரலாறு!

-பி.எஸ்.ராமையா

இன்றைக்குச் சுமார் 144 ஆண்டுகளுக்கு முன்பே ''சலனப் படக்காட்சி'' (திரைப் படக் காட்சி) தோன்றிவிட்டது. 1833-ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் ஒருவர் ஒரு குழாயின் உட்புறத்தில் ஒரு மனிதன் நடப்பது போலப் பல சித்திரங்கள் வரைந்தார்; குழாயின் வெளிப்புறத்தில் சிறு துவாரங்கள் செய்தார்; துவாரங்களில் கண்களை வைத்துக்கொண்டு, குழாயைச் சுற்றினார்; உள்ளே மனிதன் நடப்பது நிஜமாக நிகழ்வது போலத் தெரிந்தது. அதன் பிறகு அதைப் போலவே, ஆனால் சிறு சிறு மாறுதல்களுடன் பல திரைப் பட இயந்திரங்கள் தோன்றின. அவற்றிற்கு 'ஆட்டோஸ்கோப்' ( Autoscope ), 'மோட்டார்ஸ்கோப்' ( Motorscope ) என்றெல்லாம் பெயரிட்டார்கள்.

இவற்றிற்கெல்லாம் கையால் எழுதப்பட்ட படங்களே உபயோகிக்கப்பட்டன. அதற்கு முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு, ஒருவர் தம் பிள்ளைகள் ஒரு பெட்டியில் ஆணியடிப்பதைப் பல நிலைகளில் போட்டோ எடுத்தார். அந்தப் போட்டோக்களை ஒரு பல் சக்கரத்தின் பற்களில் வரிசையாக ஒட்டினார். சக்கரத்தைச் சுற்றிப் பார்த்தால், ஆணியடிப்பது தத்ரூபமாக நடப்பது போல இருந்தது.

ஆனால் சினிமாவின் சரியான ஆரம்பம் அதற்குப் பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகுதான் தோன்றியது. அமெரிக்காவில் யாரோ இருவருக்குள் நேர்ந்த ஒரு விவாதத்திலிருந்துதான் இன்றையச் சினிமா பிறந்தது.

''ஒரு குதிரை வேகமாக—நாலுகால் பாய்ச்சலில்-ஓடும்போது அதன் நான்கு கால்களும் தரையில் படாமல் மேலே கிளம்பிவிடுகின்றன'' என்றார் ஒருவர்.

''அது சாத்தியமேயில்லை; ஒரு காலாவது தரையைத் தொட்டுக்கொண்டுதான் இருக்கும்'' என்றார் மற்றொருவர்.

எது சரியென்பதை நிச்சயிக்க ஒரு குதிரை ஓடும்போது அதைப் பல நிலைகளில் போட்டோ எடுக்க முடிவு செய்யப்பட்டது.

பந்தய வட்டத்தில், பல இடங்களில் இருபத்து நான்கு காமிராக்கள் வைக்கப்பட்டன. குதிரை பாய்ந்து செல்லும்போது காமிராக்கள் மின்சாரச் சக்தியால் தாமே போட்டோ எடுத்து மூடிக் கொள்ளும்படியும் ஏற்பாடு செய்யப்பட்டன. படங்களை எடுத்துப் பார்த்தபோது குதிரை நான்கு கால்களும் தரையில் படாமல் கிளம்பி விடுகிறது என்ற கட்சியே ஜெயித்தது.

அந்த விவாதத்தின் பலனாக எடுத்த போட்டோக்களை வரிசையாக வைத்துத் தள்ளிக்கொண்டே போனால் குதிரையின் ஓட்டமே பிரத்தியட்சமாகத் தெரிவது போல இருந்தது.

இதே சமயத்தில், மின்சாரச் சக்தி சம்பந்தமான ஆராய்ச்சியாளர்களில் தலைமை வகிக்கும் அமெரிக்க விஞ்ஞானி 'எடிசன்' திரைப்பட விஷயத்தில் உற்சாகமடைந்து ஆராய்ச்சிகள் செய்து கொண்டிருந்தார்.

இன்னொரு பக்கத்தில் 'ஈஸ்ட்மன் கோடக்' என்பவர் போட்டோ எடுப்பதற்காகப் பிலிம்களும், தாள்களும் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தார். அவர் அப்பொழுதுதான் ஒரு புது தினுசான பிலிம் கண்டு அல்லது சுருள் தயார் செய்திருந்தார். இப்போதுகூட சிறு காமிராக்களில் போட்டோ எடுப்பவர்கள், காமிராவில் இம்மாதிரியான கண்டுகளைச் செருகி வைத்து, ஒருபடம் எடுத்தவுடன் அடுத்த படத்திற்காகப் பிலிமை இழுத்து விடுவதைப் பார்க்கலாம்.


எடிசன் இந்த பிலிம் கண்டுகளை உபயோகித்து அடுத்தடுத்து வரிசையாகப் படங்கள் எடுத்து முதல் முதல் ''திரைப் படம்'' தயாரித்தார். இதற்கு அவர் 'கினிடோஸ்கோப்' என்று பெயரிட்டார். அது ஏறக்குறைய ''பார் பார் பட்டணம் பார்'' தகர பயாஸ்கோப் மாதிரித்தான் இருந்தது. உள்ளே ஐம்பதடி நீளமுள்ள படம்தான் இருக்கும். இதை ஒரு சமயத்தில், ஒருவர்தான் பார்க்கலாம். பார்க்கும்போதே ஒரு கைப்பிடியைச் சுற்றினால் படத்திலுள்ள உருவம் நடப்பது அல்லது ஓடுவது உண்மையாக நிகழ்வது போல இருக்கும்!

இந்த இடத்திலிருந்து ஆராய்ச்சிகள் மிக மிக வேகமாக முன்னேறின.

முதலில் ஆராய்ச்சியளவிலிருந்த சலனப்படக்காட்சி என்ற கருத்து இன்று ஒரு தொழிலாகி, வியாபாரமாகி, கலையாகிப் பெருகி வளர்ந்து ஓங்கிவிட்டது. மனித வாழ்க்கையின் அன்றாட வேலைகளில் சினிமாப் பார்ப்பதும் ஒன்றாகி விட்டது.


## பிரமையும் பிலிமும்

கார்த்திகை மாதத்தில் கிராமத்துப் பிள்ளைகள் வாணம் சுற்றி விளையாடுவதைப் பார்த்திருப்



பீர்கள். ஒருவன் தலைக்கு மேல் ஒரு தீப்பொறி வட்டம் தெரிவதைக் கவனித்திருப்பீர்கள். வாணம் அந்த வட்டத்தில் ஒரு சிறு அம்சம்தான். இருந்தும் ஒரு முழு வட்டம் எப்படித் தெரிகிறது?

நம் கண்களில் அல்லது காணும் இந்திரியத்தில் ஒருவிதமான பிரமை அல்லது மயக்கம் இயற்கையாக அமைந்திருக்கிறது. இந்தப் பிரமையினுல் அடுத்தடுத்து வரும் பலபொருள்கள் தொடர்ச்சியாக வரும் ஒரே பொருளாகத் தோன்றுகின்றன. தலைக்குமேல் சுற்றும் மின்சார விசிறியில் மூன்று இலைகளிருக்கின்றன. ஒவ்வொரு இலைக்கும் இடையில் நிறைய இடைவெளி இருக்கிறது. ஆனுல் விசிறி வேகமாகச் சுற்றும்போது இலைகளுக்கு இடையிலுள்ள இடைவெளி மறைந்து ஒரே ஒரு வட்டத்தகடு வேகமாகச் சுழலுவது போலத்தான் நமக்குத் தோன்றுகிறது. இந்தத் தோற்றம்தான் பிரமை அல்லது மயக்கம்.



இந்த பிரமையை அஸ்திவாரமாகக் கொண்டுதான் சினிமா சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறது. குதிரையின் ஓட்டப் படங்களை வரிசையாகத் தள்ளிக் கொண்டே போனபோது குதிரை நிஜமாகவே ஓடுவதுபோலத் தோன்றியது இந்த பிரமையினுல்தான்! ஓடுவது, நீந்துவது முதலியவற்றையும் அடுக்கடுக்காகப் படமெடுத்து அதெல்லாம் நிஜமாகவே நிகழ்வதுபோலக் காட்டுவதற்கும் இந்தப் பிரமைதான் ஆதாரம். இந்த போட்டோ அடுக்குக்குப் 'பிலிம்' ( Film ) என்று பெயர்.

### பிலிம் சுருள்

போட்டோ எப்படி எடுக்கப்படுகிறதென்பது பலருக்குத் தெரிந்திருக்கும். ஒரு சுத்தமான கண்ணுடிப் பலகையின் ஒரு பக்கத்தில் இரசாயனமுறையில் தயாரித்த ஒரு மெழுகு தடவப்பட்டிருக்கிறது. இந்த மெழுகுக்கு ''எமல்ஷன்'' (Emulsion) என்று பெயர். 'எமல்ஷன்' தன் மேல் வெளிச்சம் பட்டால் கறுத்து விடும் தன்மையுடையது. ஆகையால் எமல்ஷன் தடவிய கண்ணுடியைப் பத்திரமாக மூடிக் காமிராவுக்குள் வைத்துக் கொள்ளுகிருர்கள். காமிராவின் முகத்தில் ''லென்ஸ்'' ( Lens ) என்னும் ஒரு சிறு கண்ணுடிக்கண் இருக்கிறது. இது சாதாரணக் கண்ணுடி வகையைச் சேர்ந்ததல்ல! பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டது. அதன் மூலம் வெளிச்சம் காமிராவுக்குள் நுழைந்து உள்ளேயிருக்கும் 'எமல்ஷன்' மேல் விழுந்தவுடன், காமிராவுக்கு எதிரிலிருக்கும் பொருளின் உருவம் 'எமல்ஷனில்' பதிவாகிறது. பிறகு இந்த 'எமல்ஷனை' இன்னெரு இரசாயன முறையில் கழுவினுல், வெளிச்சம் பட்டுக் கறுத்த பகுதி அப்படியே தங்கி, படாத பகுதி கரைந்து விலகி விடுகிறது. இப்போது கண்ணுடிப் பலகையில் போட்டோ எடுக்கப்பட்ட உருவம் கறுப்பாகத் தங்கியிருக்கிறது. இதைக் கொண்டு பிரதியெடுத்தால் நாம் பார்க்கும் புகைப் படம் கிடைக்கிறது.

போட்டோ எடுக்கும் 'எமல்ஷன்' தடவிய சாதனத்திற்கு 'நெகடிவ்' ( Negative ) என்று பெயர். ஆதிகால நெகடிவ்கள் பலகை பலகையாக இருந்ததால் வரிசை வரிசையாகப் பல படங்களை அடுத்தடுத்து எடுப்பது சிரமமாக இருந்தது. அந்தச் சிரமத்திலிருந்து விடுபடும் முயற்சியில் தான் 'ஈஸ்ட்மன் கோடக்' என்பவர் பிலிம் கண்டு அல்லது சுருள் பிலிம் தயாரித்தார். இந்தச் சுருள் 'பிலிம்' நெகடிவ்களை உபயோகித்து வேகமாகவும், வரிசையாகவும் போட்டோக்கள் எடுப்பது சாத்தியமாயிற்று. இப்போது சினிமா பிலிம் சுருள்கள் ஆயிரம் அடி நீளத்தில் தயாரிக்கப்படுகின்றன.


### திரைப்பட நுணுக்கம்

ஓர் அடி நீளமுள்ள பிலிமில் பதினறு ''கணுக்கள்'' அல்லது ''பிரேம்கள்'' ( Frame ) இருக்கின்றன. ஒவ்வொரு பிரேமிலும் ஒரு போட்டோ எடுக்கலாம். அதாவது ஒரு அடி நீளமுள்ள பிலிமில் பதினறு பிரேம்கள் அல்லது பதினறு தனித்தனி போட்டோக்கள் அடங்கியிருக்கின்றன.

ஒரு பிரேம் முக்கால் அங்குல உயரமும், சுமார் ஓர் அங்குல அகலமும் உள்ளது.

சினிமாக் காமிராவில் 'பிலிம்' சுருளைப்போட்டுப் போட்டோ எடுக்கும்போது ஒரு சிறு மோட்டாரின் உதவியால் சுருள் வேக

காமிரா




மாகத் தள்ளப்படுகிறது. அப்போது ஒவ்வொரு பிரேமும் லென்ஸுக்கு முன்னால் ஒரு வினாடியில் இருபத்து நான்கில் ஒரு பகுதி நேரம் நின்று, போட்டோவைத் தன்மேல் பதிவு செய்து கொண்டு மேலே போகிறது.

இப்படி ஒவ்வொரு பிரேமாக ஒரு வினாடியில் இருபத்துநான்கு போட்டோக்கள் எடுக்கப்படுகின்றன. அதாவது ஒரு வினாடியில் ஒன்றரையடி நீளமுள்ள படம் பிடிக்கப்படுகிறது. ஒரு நிமிடத்திற்கு 90 அடி.

படம் சினிமாக் கொட்டகையில் காட்டப்படும் பொழுதும் இதே வேகத்தில்—நிமிஷத்திற்கு 90 அடி வேகத்தில்தான் காட்டப்படுகிறது.

கொட்டகையில் 'புரொஜக்டர்'' (Projector) என்று ஓர் இயந்திரம் இருக்கிறது. இந்த இயந்திரத்தில் மிக மிகப் பிரகாசமான ஒளி உண்டாக்குவதற்கான சாதனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒளியை ஒரு 'லென்ஸ்' வழியாக, நேர் எதிரில் கொஞ்ச தூரத்தில் அமைக்கப்



புரொஜக்டர்

பட்டிருக்கும் திரையின் மேல் போய் விழச் செய்கிறார்கள். இந்த ஒளிக்கும் திரைக்கும் நடுவில் பிலிம் சுருள் ஓட்டப்படுகிறது. பிலிமின்மேல் விழுந்த ஒளி, திரையில் விழுவதால், பிலிமிலுள்ள படம் திரையின்மேல் தெரிகிறது.

பிலிமிலுள்ள ஒவ்வொரு பிரேமும், ஒளியில் இருபத்துநான்கில் ஒரு பங்கு வினாடி நேரம் நின்று விட்டு, மேலே போகிறது. பிறகு அடுத்த பிரேம் வந்து நின்று விட்டுப் போகிறது. அதாவது ஒரு வினாடி நேரத்திற்குள், திரையின்மேல் அடுத்தடுத்து இருபத்து நான்கு போட்டோக்கள் தோன்றித் தோன்றி மறைகின்றன.

ஒரு படம் தோன்றி மறைவதற்கும் அடுத்த படம் வந்து சேருவதற்கும் இடையிலுள்ள நேரம் மிக மிகக் குறைவாக இருப்பதால், இந்த இடைக் காலம் நம் கண்ணில் படுவதில்லை. ஒரு படத்திற்கும் இன்னொரு படத்திற்கும் இடையிருப்பதே நமக்குத் தெரிவதில்லை. ஆகையால் படங்கள் இடைவெளியின்றித் தொடர்ச்சியாக வருவதாகத் தோன்றுகிறது. நமது கண்ணிலுள்ள பிரமையால் பிரேம்களுக்கு இடையிலுள்ள வெளி மறைந்துவிடுகிறது.

இம்மாதிரி வேகமாகவும், வரிசையாகவும் போட்டோக்களை எடுத்து, அதே வேகத்துடனும், வரிசையாகவும் திரையின்மேல் அந்தப் படங்களைக் காட்டுவது தான் ''சலனப் படக்காட்சி'' அல்லது சினிமா.

[திரு பி.எஸ். ராமையா அவர்கள் எழுதிய 'சினிமா' என்ற புத்தகத்திலிருந்து தொகுக்கப்பட்டது.]

# திரைப்படக்கருவி யாரால் கண்டுபிடிக்கப் பட்டது?

''திரைப்படக்கருவி யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?''

இந்த வினாவுக்கு உடனே, ''தாமஸ் ஆல்வா எடிசன்!'' என்று சொல்லிவிடுவீர்கள். ஆனால், இவருக்கு முன்பே இதைக் கண்டுபிடிக்க மூல கர்த்தராக இருந்தவர் ஒரு கவிஞர்!

ஆம்! 'திரைப்படம்' என்கிற 'சினிமா' கண்டுபிடிக்கப்படுவதற்கு முதல் காரண கர்த்தராக இருந்தவர், ரோமானியக் கவிஞர் 'லூக்ரீஷெஸ்' என்பவர்! இவர் கி.மு. 65ல், கண்ணுக்கு உள்ள ஒருவகைப் பண்பைக் கண்டுபிடித்தார்.

நாம் ஒரு பொருளைப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அது திடீரென்று மறைந்து விடுவதாக வைத்துக் கொள்வோம். அப்பொருள் மறைந்தவுடனே, அது நமது கண்ணிலே தோற்றுவித்த புலன் உணர்ச்சியும் மறைந்து விடுவதில்லை. அவ்வுணர்ச்சி மறைந்து போவதற்குச் சிறிது தாமதம் ஏற்படுகிறது. இத்தாமதக் காலம் ஒரு செகண்டிலே பதினாறில் ஒரு பங்காகும். எனவே, ஒரு பொருள் நமது காட்சியிலிருந்து மறைந்து 1/16 செகண்டுக்குள்ளே மறுபடியும் தோன்றக் கூடுமானால், அப்பொருள் மறைந்து பின்னர் தோன்றியது நமது கண்ணுக்குப் புலனாகாது போய்விடும். கண்ணுக்குள்ள இப்பண்புக்குப் 'பார்வை நிலைப்பு' என அக்கவிஞர் பெயரிட்டார்.

இக்கண்டுபிடிப்புக்கு 200 ஆண்டுகளுக்குப் பிறகு டாலமி என்னும் வானவியல் அறிஞர் இப்பண்பைப் பரிசோதனை மூலம் நிரூபித்தார். இவருக்குப்பின் வந்த தாமஸ் ஆல்வா எடிசன் உட்பட, பல நாட்டு அறிவியல் அறிஞர்களும் இத்துறையில் ஓயாது உழைத்து வந்தனர். அதன் பயனாக, இன்று நவீன திரைப்படக் கருவிகள் உருவாகியுள்ளன.

ஆதாரம்:

தமிழ்க் கலைக் களஞ்சியம்.




சிறந்த ஓவியர்களுக்கும், கைவினைஞர்களுக்கும் வழங்கப்பட்டு வரும் மகாத்மா காந்தி நூற்றாண்டு நினைவுப் பரிசை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள், 16—12—1977 அன்று, விக்டோரியா தொழில்நுட்ப நிறுவனத்தில் நடைபெற்ற விழாவில் வழங்கினார். திரு டி. கே. மூர்த்தி அவர்கள் முதல் பரிசு பெறுவதைப் படத்தில் காணலாம்.

# படமும் செய்தியும்



இந்திய கட்டடம் கட்டுவோர் சங்கத்தின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கட்டடம் கட்டுவோர் பொருட் காட்சியை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள், 16—12—1977 அன்று, திறந்து வைத்துப் பார்வையிட்டார்.





சென்னை தீவுத் திடலில், போர்நினைவுச் சின்னத்திற்கு எதிரில் அமைந்துள்ள, அனைத்து இந்திய சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியை, 22—12—1977 அன்று மாலை, மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் துவக்கி வைத்தார். அவ்விழாவிற்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமை வகித்தார். பொருட்காட்சியில் அமைந்துள்ள அண்ணா கலையரங்கை, மாண்புமிகு தமிழகச் செய்தி—சுற்றுலா அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் திறந்து வைத்தார்.

தமிழகக் கல்வித்துறையின் 150–வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி, 24—12—1977 அன்று, சென்னை இராஜாஜி மண்டபத்தில் அமைக்கப்பட்டிருந்த கல்விக் கண்காட்சியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் திறந்து வைத்துப் பார்வை யிட்டார்.








கை அறுவைச் சிகிச்சைக்கான இந்திய சங்கத்தின் 5-வது மாநாட்டை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள், 24—12—1977 அன்று, சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் துவக்கி வைத்தார்.

இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் திரு ஐ. ஜி. பட்டேல் அவர்கள், 27—12—1977 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களைச் சந்தித்து உரையாடினர்.



# நிதி குவிகிறது!....




தமிழகப் புயல்-வெள்ள நிவாரண நிதிக்காக, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் ரூபாய் 1,08,523-91-க்குரிய காசோலையை, 16.12.1977 அன்று, மாண்புமிகு தமிழகப் போக்குவரத்து அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர் அவர்களிடம் வழங்கினார்.

எண்ணூர் பௌண்டரி லிமிடெட் சார்பில் ரூ. 26,000-க்குரிய காசோலையை 16.12.1977-ல், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினார்கள்.



நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் சார்பில் ரூ. 84,380-02-க்குரிய காசோலையை, 16.12.1977-ல், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினார்கள்.





தமிழ்நாடு மின்சார வாரிய ஊழியர்கள் புயல்-வெள்ள நிவாரண நிதிக்காக அளித்த 7 இலட்சம் ரூபாய்க்குரிய காசோலையை மாண்புமிகு தமிழகப் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு ச. இராமச்சந்திரன் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களிடம் வழங்கினர்.

டில்லி தமிழ்க்கல்விச் சங்கத்தின் சார்பில் ரூ. 7,000-க்குரிய காசோலையை நாடாளுமன்ற உறுப்பினர் திரு ராமலிங்கம் அவர்கள், 16.12.1977-ல் வழங்கினர்.





கோவையிலும், சென்னையிலும் சுற்றுப் பயணம் செய்தபோது, புயல்-வெள்ள நிவாரண நிதிக்காக வசூலித்த ரூபாய் 1,12,937.40-க்குரிய காசோலையை மாண்புமிகு தமிழகச் சமூக நலத் துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி அவர்கள் 14-12-1977-ல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினர்.



மொடக்குறிச்சி தொகுதியில், அனைத்துக் கட்சியின் சார்பில், தமிழகப் புயல்-வெள்ள நிவாரண நிதிக்காக வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 66,631-10-ஐ, சட்டமன்ற உறுப்பினர், திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள், 17.12.1977 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினர்.

எண்ணூர் பௌண்டரி பணியாளர் யூனியன் சார்பில் ரூ. 28,739-க்குரிய காசோலையை 16-12-1977-ல், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினர்கள்.






தென்மண்டலப் படைப் பிரிவின் சார்பில் ரூபாய் 26,477-60-க்குரிய காசோலையை, மேஜர் ஜெனரல் திரு எஸ்.பி. மகாதேவன் அவர்கள், 19.12.1977 அன்று, புனித ஜார்ஜ் கோட்டையில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினர்.



வேளாண்மைத் துறையின் நிறுவனங்கள், அலுவலர்கள், கோவை நகராட்சி சார்பில், 27.12.1977 அன்று, நான்காவது தவணை வெள்ள நிவாரண நிதியாக ரூபாய் 3,17,611-20-ஐ, மாண்புமிகு தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களிடம் அளித்தார்.

தமிழகக்காவல்துறை அலுவலகப் பணியாளர்கள், நிருவாகப் பணியாளர்கள் சார்பில், ரூபாய் 5,27,195-19-க்குரிய பணவரவை (டிராப்ட்), தமிழகக் காவல் துறைத் தலைமை அலுவலர் திரு இ. எல். ஸ்ட்ரேசி அவர்கள், 17.12.1977 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களிடம் வழங்கினர்.

உங்கள் பங்கு
நிதியினை
அளித்து
விட்டீர்களா?



# முதல்வர் பேசுகிறார்!



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் அவ்வப்போது அறிவிக்கும் முக்கியத் திட்டங்களையும், கொள்கைகளையும் தொகுத்து வழங்கும்படி ''தமிழரசு'' வாசகர்கள் பலர் வேண்டுகோள் விடுத்ததற்கு ஏற்ப "முதல்வர் பேசுகிறார்'' என்ற இப்புதிய பகுதி சேர்க்கப்பட்டுள்ளது. இப்புதிய பகுதியில் தமிழக அரசின் திட்டங்களையும் கொள்கைகளையும் விளக்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பல்வேறு இடங்களில் பேசிய உரையிலிருந்தும், பத்திரிகைச் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டிகளிலிருந்தும் முக்கியமானவற்றை எடுத்து, வாசகர்களின் வேண்டுகோள்களுக்கு ஏற்ப வெளியிட்டுள்ளோம்.

## புயல்-வெள்ள நிவாரணப் பணிகளுக்கு ரூபாய் 100 கோடி திட்டம்!

''தமிழகத்தில் புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க மாநில அரசு 100 கோடி ரூபாய்க்குத் திட்டமிட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ், நாசமடைந்த குடிசைகளை மீண்டும் புதுப்பித்துத் தருவதற்கு முதலிடம் அளிக்கப்படும். நிவாரணப் பணிச் செலவு 100 கோடி ரூபாய்க்கு மேலும் அதிகமாகலாம்.''

## தங்கப் பதக்கம்!

''புயல்-வெள்ள நிவாரணப் பணியின் போது, தனது உயிரையும் மதிக்காது உழைத்தவர்களுக்குப் பரிசாகத் தங்கப்பதக்கம், வெள்ளிப் பதக்கம், பாராட்டுப் பத்திரம், பதவி உயர்வு ஆகியவைகளை அரசாங்கம் அளிக்கும்.

''ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 3 தங்கப் பதக்கமும், 5 வெள்ளிப் பதக்கமும் வழங்கப்படும்.''

## அரிசன மக்களுக்கு ஆண்டுக்கு 5,000 முதல் 8,000 வீடுகள்!

''வெள்ளத்தால் பாதிக்கப்படக் கூடிய இடங்களில் வாழக் கூடியவர்களுக்கு —குறிப்பாக அரிசன மக்களுக்கு — பாதுகாப்பு அளிக்கக் கூடிய நீண்ட காலத் திட்டங்களை உருவாக்க, தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

''அரிசன மக்களுக்கு 5 ஆயிரம் முதல் 8 ஆயிரம் வரை நல்ல கட்டடங்கள் கட்டிக் கொடுக்கும் பணியை அரிசன நலத் துறை மேற்கொள்ளும்,

## 3,000 தமிழ்ப் புலவர்களுக்கு வேலைவாய்ப்பு!

''கோயில்கள் சரிவர நிர்வகிக்கப்படுவதை மேற்பார்வையிட, கண்காணிப்புக் குழு அமைப்பது பற்றித் தமிழக அரசு பரிசீலித்து வருகிறது.

''சில கோயில்களில் கண்காணிப்புக் குழுவும், தர்மகர்த்தாக் குழுவும் அமைக்கப்படும். இவைகள் செயல்படும் விதம் பற்றி ஆராய்ந்து, பிறகு பழைய தர்மகர்த்தாக் குழுவை நீடிப்பதா அல்லது விட்டு விடுவதா என்பது பற்றி முடிவு எடுக்கப்படும். இரண்டும், சரியாக இருந்தால் இரண்டும் நீடிக்கப்படும்.

''கோயில் தர்மகர்த்தாக்கள் ஓரளவு படித்தவர்களாகவும், நாணயமானவர்களாகவும் இருக்க வேண்டும். அந்தந்தக் கோயில்களின் வரலாறு தெரிந்தவர்களாகவும் இருக்க வேண்டும்.

''அமைக்கப்பட இருக்கும் தர்மகர்த்தா-கண்காணிப்புக் குழுக்கள் நடைமுறையில் எப்படி அமையும் என்பதை அறிவதற்காக

சில கோயில்களில் இந்தக் குழுக்கள் விரைவில் அமைக்கப்படும்.

**"3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்ப் புலவர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் கண்காணிப்புக் குழுக்களில் இடம் பெறுவார்கள்."**

*[மாண்புமிகு முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள், மதுரையில், 5—12—'77 அன்று பத்திரிகைச் செய்தியாளர்களிடம் கூறிய செய்திகளில் இது ஒரு பகுதி].*

## வெள்ள நிவாரணப் பணிகளில் மக்களுக்கு வேலை வாய்ப்பு!

''வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் சாலைகள், ஏரிகள் பழுது பார்க்கும் வேலையை 'காண்ட்ராக்ட்' விடுவதில்லை.

''ஆங்காங்கு அனைத்துக்கட்சி சார்பில், மக்கள் குழுக்களை அமைக்க வேண்டும்.

''என்ஜினியர்கள் ஆதரவுடனும், நிர்வாக மேற்பார்வையுடனும் சாலை, ஏரி பழுது பார்க்கும் வேலை நடைபெற வேண்டும்.

**"50 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நிவாரண வேலைகளை 'காண்ட்ராக்ட்' விடாமல், அந்தந்தப் பகுதி மக்களுக்கே ஒதுக்க வேண்டும்.**

''நிவாரணப் பணிகளில் பொது மக்கள் வேலை செய்து உரிய ஊதியத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.''

*[திருச்சியில் 2—12—'77 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் கூறியது.]*

## கடலோரப் பகுதிகளில் உள்ளவர்களுக்குப் பாதுகாப்பு!

'பல இடங்களில் கடலோரப் பகுதிகளில் உள்ளவர்களுக்கு நிரந்தரப் பாதுகாப்பிற்கு இடம் தேவை. கடல் அரிப்பு இருப்பதால், நிலப்பகுதி குறைந்து வருகிறது. இதைத் தடுக்கத் திட்டம் தீட்டி, சில கோடி ரூபாய் ஒதுக்கி உள்ளோம். அதைச் செய்தே ஆக வேண்டும்.

''நம் வசதிக்கு ஏற்ற கடற்கரை ஓரங்களிலும், தாழ்வான பகுதிகளிலும் பாதுகாப்புக்குத் தேவையான கட்டடங்கள் கட்டலாம். அந்தக் கட்டடங்கள் பள்ளிக் கூடமாகவோ, கல்யாண மண்டபங்களாகவோ, மீனவர் பயிற்சி நிலையங்களாகவோ இருக்கலாம். இது எங்கள் யோசனையில் இருக்கிறது.

''கடற்கரையை ஒட்டி மீனவர்கள் குடியிருப்பது மிகவும் ஆபத்தானது. அவர்கள் தொழிலுக்காக அங்கு குடியிருந்தாலும், வாழ்க்கைக்குப் பாதுகாப்பு அளிக்க அவர்களை வேறு பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றித் தர வேண்டும்''.



## கோயில்களைப் பாதுகாக்க வேண்டும்!

''கோயில்களைப் பரிசுத்தமான இடங்களாக வைக்க வேண்டும். அவை புனிதத் தன்மையானவை.

''இசை வேளாளருக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். அவர்களில் ஏழை, பணக்காரர்கள் என்று இரண்டு பிரிவு இருக்கிறது. ஏழைகளுக்குப் பாதுகாப்பு இல்லை.

''கோயில்களில் பணக்காரக் கோயில், ஏழைக்கோயில் என்று இருக்கிறது. ஏழைக் கோயில்களைப் பணக்காரக் கோயில்கள் 'தத்து' எடுக்க வேண்டும்.

''கோயில் தர்மகர்த்தாக்களும் மற்றும் கோயில்களில் பதவி வகிப்பவர்களும் தெய்வ வழிபாடு செய்ய வருகிற பக்தர்கள் தங்கும் விடுதியை ஆக்கிரமிப்பு செய்து கொள்வதால் பக்தர்களுக்கு இடம் கிடைப்பதில்லை. அம்மாதிரியான விடுதிகளை அதிகாரிகளோ, தர்மகர்த்தாக்களோ பயன்படுத்தக் கூடாது என்று உத்தரவு போடப்படும்.

''அதிகாரிகள் கோயிலில் பணியாற்றும் போது சுத்தமாகவும், பொறுப்பை உணர்ந்து, பய உணர்ச்சியோடும் செயல்பட வேண்டும்.

''வெறும் கணக்கு எழுதுபவராக இருக்கக்கூடாது. தெய்வ நம்பிக்கை உள்ளவர்களாக, கலை நுட்பம் வாய்ந்தவர்களாக—கோயில் சொத்துக்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற உணர்ச்சி உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

''கோயிலில் நல்ல கருத்துக்கள் எழுதப்பட்டு இருக்க வேண்டும். தேவாரம், திருவாசகம், திருப்பாவை போன்றவைகள் கோவில்களுக்கு ஏற்பச்சொல்லித் தரவோ, இசைக்கப்படவோ வேண்டும்.

''கோயில்களில் வேலை செய்யும் சாதாரண ஆட்களுக்கும் ஓரளவு ஊதியம் இருக்க வேண்டும். அவர்களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதம் இருக்க வேண்டும். இவைகளை எல்லாம் ஒழுங்குபடுத்தியாக வேண்டும்.

''கோயில் நிர்வாக அமைப்புகளை மாற்றியாக வேண்டும். இதற்குத் திட்டமிடப்பட்டு உள்ளது.

[பூம்புகாரில் 3—12—'77 அன்று பத்திரிகைச் செய்தியாளரிடையே முதல்வர் கூறியது]

## எல்லோருக்கும் வீடு !

**"எல்லோருக்கும் குடியிருக்க, குடும்பத்திற்கு ஒரு வீடு கட்டாயமாகச் சொந்தமாக இருக்க வேண்டும் என்பது எங்கள் கொள்கை.**

''அந்த அடிப்படையில் முதல் கட்டமாக வீடு இல்லாத எல்லோருக்கும் இலவச வீட்டு மனை வழங்க இந்த அரசு திட்டமிட்டுள்ளது. விரைவில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்.

''பள்ளத் தாக்குகளிலும், தாழ்வான இடங்களிலும், வீடுகள் கட்டப்படுவதால் தான் திடீர் வெள்ளத்தால் வீடுகள் அடித்துச் செல்லப்படுகின்றன.

''இனி இந்த நிலை இருக்காது. மேடான இடங்களில் வீடுகள் கட்டப்படும் திட்டம் நிறைவேற்றப்படும்.

## எல்லோருக்கும் வேலைவாய்ப்பு !

**"உழைப்பவர்கள் வாழ்ந்தாக வேண்டும். உழைக்கத் தயாராக இருப்பவர்களுக்கு வேலை கிடைத்தாக வேண்டும். படித்தவர்களுக்கு நிச்சயம் வேலை கிடைத்தாக வேண்டும்.**

''அந்த முறையில் தமிழக அரசு திட்டம் போட்டுச் செயல்படுத்தி வருகிறது. இந்த அடிப்படையில்தான் நிலப்படை அமைப்பது பற்றி ஏற்கெனவே அறிவித்துள்ளோம்.

''இந்த நிலப்படை அமைக்கும் நோக்கமே பல்வேறு விதமான பணிகளை இந்த நிலப்படை மேற்கொள்ள வேண்டும் என்பதாகும்.

''நிலப்படை அமைப்பதால், வேலை இல்லாத் திண்டாட்டத்திற்குப் பரிகாரம் காண முடியும்.

''அனைத்துப் பணிகளிலும் நிலப்படை நேரடியாக பங்கு கொள்வதால் காண்ட்ராக்ட்டர்கள், இடைத் தரகர்கள் அகற்றப்படுகிறார்கள்.

''அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவுடன் சீரணிப் படையை அமைத்தார்கள்.

**"பேரறிஞர் அண்ணாவின் இலட்சியத்தை நிறைவேற்றும் விதத்தில் இந்த நிலப்படை அமைக்கப்பட இருக்கிறது."**

[குடுமியான் மலையில், 3—12—'77 அன்று நடைபெற்ற வீட்டு மனைப் பட்டா வழங்கும் விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கூறியது].

## நாடகம் தந்தபாடம்

என் தந்தையார் வாங்கியிருந்த 'சிரவணனின் பிதிர் பக்தி நாடகம்' (இது சிரவணன் பெற்றோரிடம் கொண்டிருந்த பக்தியைப் பற்றிய நாடகம்) என்ற புத்தகம் என் கண்ணில் எப்படியோ பட்டது. தீவிரமான சிரத்தையுடன் அப்புத்தகத்தைப் படித்தேன். அந்தச் சமயத்தில் எங்கள் ஊருக்குப் படங்களைக் காட்டுவோரும் வந்திருந்தார்கள். நான் பார்த்த படங்களில் ஒன்று, கண்ணிழந்த தன்னுடைய தாய் தந்தையரைச் சிரவணன் கூடையில் வைத்துக் காவடியாகத் தோளில் சுமந்து கொண்டு போனதைக் காட்டுவது. அப்புத்தகமும் இப்படமும் என் மனத்தில் அழியாத முத்திரை போட்டுவிட்டன. 'நீ பின்பற்றுவதற்கு இது ஒரு சரியான உதாரணம்' என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன். சிரவணன் இறந்ததால் புத்திர சோகத்தோடு பெற்றோர் வருந்திப் பிரலாபித்தது என் நினைவில் இன்னும் அப்படியே இருந்து வருகிறது. சோகம் மிகுந்த அந்தக் கீதம் என் உள்ளத்தை உருக்கிவிட்டது. என் தந்தை, எனக்காக வாங்கியிருந்த வாத்தியத்தில் அந்தக் கீதத்தை வாசித்தேன்.

மற்றொரு நாடக சம்பந்தமாகவும் இதே போன்ற ஒரு சம்பவம் உண்டு. ஏறக்குறைய அதே சமயத்தில் ஒரு நாடகக் குழுவினர் நடத்தி வந்த ஒரு நாடகத்தைப் பார்க்க என் தந்தையாரின் அனுமதி பெற்றேன். 'அரிச்சந்திரன்' என்ற இந்நாடகம், என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. எத்தனை தரம் அதைப் பார்த்தாலும் எனக்குச் சலிப்பு ஏற்படாது. ஆனால், அதைப் போய்ப் பார்க்க எத்தனை தடவைதான் என்னை அனுமதிப்பார்கள்? அது சதா என் நினைவில் இருந்து வந்தது. எண்ணற்ற சமயங்களில் எனக்குள் நானே அரிச்சந்திரனாக நடித்திருப்பேன். 'அரிச்சந்திரனைப் போல எல்லோரும் ஏன் சத்திய சீலர்கள் ஆகக் கூடாது?'' என்று அல்லும் பகலும் என்னை நானே கேட்டுக் கொள்ளுவேன். சத்தியத்தைக் கடைப்பிடிப்பதும். அதற்காக அரிச்சந்திரன் அனுபவித்த துன்பங்களையெல்லாம் அனுபவிப்பதுமாகிய லட்சியமே ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கியது. அரிச்சந்திரனின் கதை, உண்மையிலேயே நடந்த ஒன்று என்றே நான் நம்பிவிட்டேன். அதை நினைத்துப் பல சமயங்களில் அழுதும்விடுவேன். அரிச்சந்திரன் சரித்திர புருஷனாக இருந்திருக்க முடியாது, என்று என் பகுத்தறிவு இன்று எனக்குக் கூறுகிறது. என்றாலும், என்னைப் பொறுத்தவரையில் அரிச்சந்திரனும் சிரவணனும் வாழ்வின் உண்மைகள். அந்த நாடகங்களைத் திரும்ப இன்று நான் படித்தாலும், முன்போலவே என் மனம் உருகிவிடும் என்பது நிச்சயம்.

**—அண்ணல் காந்தியடிகள்.**

(ஆதாரம்: மகாத்மா காந்தி நூல்கள்—3.)

# குற்றவாளிகளைத் தண்டிக்காமல்
# சீர்திருத்தும் முறை





குற்றவாளிகளைச் சீர்திருத்துவது என்றால் சிறைத் தண்டனை வழங்குவது தான் எனப் பலர் கருதுகிறார்கள். ஆனால் அவர்களைச் சிறைச்சாலைகளுக்கு அனுப்பாமலே திருத்தும் சீரிய முறை ஒன்று உள்ளது. அப்படியா! கேட்கவே வியப்பாய் இருக்கிறதே, எனப் பலருக்கு எண்ணத் தோன்றும். தற்காலத்தில் அவ்வாறு பரவலாகக் கையாளப்படும் முறை தான் நன்னடத்தைக் கண்காணிப்பு முறை ( Probation System ) ஆகும்.

இம் முறையில், குற்றவாளிகளுக்கு அவர்கள் புரிந்த குற்றத்திற்குரிய தண்டனையை வழங்காமல், குறித்த காலத்திற்கு நன்னடத்தையுடன் வாழ வேண்டும் என்ற நிபந்தனையுடன் விடுதலை வழங்கப்படுகிறது. இவ்வாறு நன்னடத்தைப் பொறுப்பின் கீழ் விடுதலை அனைவருக்கும் வழங்கப்படுவது இல்லை. குற்றவாளிகளின் கடந்த கால நடத்தை, வயது, குற்றம் புரிந்த சூழ்நிலை, திருந்தி வாழ்வதற்கான வாய்ப்பு ஆகியவற்றை ஆய்ந்து நன்னடத்தை அலுவலர் ( Probation Officer ) அளிக்கும் பரிந்துரையின்படி வழங்கப்படுகிறது.

**நன்னடத்தை தவறினால் தண்டனை !**

இங்கு விடுதலை எனக் குறிப்பது, குற்றம் சாட்டப்பட்டவரைக் குற்றம் நிரூபிக்கப்படாமையால், விடுதலை புரிவதற்கு ஒப்பாகாது. ஏனெனில், இதன் மூலம் தண்டனை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டாலும் அல்லது ஒத்தி வைக்கப்பட்டாலுங் கூட இதுவும் ஒரு வகை தண்டனையே ஆகும். இதில், நன்னடத்தைப் பொறுப்புக் காலத்தில், அவசியம் ஏற்பட்டால், நீதிமன்றம் திரும்பவும் அழைத்துத் தவிர்க்கப்பட்ட தண்டனையை அளிக்கலாம். ஆகவே, இம் முறையில் விடுவிக்கப்பட்டவர் அமைதிக்கு ஊறுநேரும் எச்செயலிலும் ஈடுபடாமல் நன்னடத்தையுடன் வாழ வேண்டும். மாறாக நன்னடத்தை விடுவிப்பின் பொழுது விதித்த நிபந்தனைகளை மீறினால், அவர் முன்பு செய்த குற்றத்திற்குரிய தண்டனை அளிக்கப்படும்.

**நன்னடத்தை முறையின் நன்மைகள் !**

இம் முறையினால் குற்றவாளியால், சமுதாயத்திற்கு ஏற்படும் தீங்கு களையப்படுகின்றது. குற்றவாளி சிறை செல்லாது சமூகத்தினரோடு இணைந்து வாழ்வதால், அவரது சமூக வாழ்க்கை பாதிப்புறாமலேயே திருந்தி வாழ வாய்ப்பு நல்கப்படுகிறது. குற்றவாளி சிறைக்குச் செல்வதால் அடையும் இன்னல்களில் இருந்து அவரது குடும்பம் காப்பாற்றப்படுகின்றது. மேலும், குற்றவாளியைச் சிறைச்சாலைக்கு அனுப்புவதால் அரசிற்கு ஆகும் செலவை விட நன்னடத்தைத் திட்டத்தின் கீழ்ச் சீர்திருத்த ஆகும் செலவு பன்மடங்கு குறைவு.

**நன்னடத்தை முறை தோன்றிய கதை !**

''சிறு பொறிதான் நெருப்பாகின்றது!'' என்பார்கள். அதுபோல் இச்சிறந்த திட்டம் தோன்றியது எளியவர் ஒருவரின் பெருந்தன்மையான உள்ளத்தில்தான். அமெரிக்காவிலுள்ள 'மாசெச்சூசெட்டை'ச் சேர்ந்த 'ஜான் அகஸ்டஸ்' என்ற செருப்புத் தொழிலாளி இளங் குற்றவாளிகள் சிறைக்கனுப்பப்படுவது கண்டு மனம் நைந்தார். அவர்களது விடுதலைக்குத் தானே பொறுப்பேற்றுக் கொண்டு, அவர்களைக் குற்றவழியில் இருந்து திருப்பித் திருந்திய பாதையில் வழிநடக்கச் செய்தார். இவ்வாறாக 1841 முதல் 1859 வரை ஈராயிரம் இளங்குற்றவாளிகளுக்குப் பொறுப்பேற்று விடுதலை வாங்கித் தந்து சீர்திருத்தினார் அவர். அச்செயல், சீர்திருத்தவாதிகளின் சிந்தையைக் கவர்ந்தது! குற்றவாளிகளை மனிதாபிமானத்துடன் நடத்தி, அன்பு, நட்புணர்வு ஆகியவற்றைக் காட்டித் தக்க அறிவுரை கூறினால், அவர்களும் வாழ்க்கைப் புத்தகத்தில் புதிய ஏட்டினைத் திறந்து வைப்பார்கள் என உணரச் செய்தது. எனவே, சீர்திருத்த எண்ணங் கொண்ட நீதிபதிகளாலும் நிர்வாகத்தினராலும் இம் முறை பரவலாகப் பயன்படுத்தப்பட்டது.

நாளடைவில், அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் பல மேலை நாடுகளில் ''நன்னடத்தைக் கண்காணிப்புத்'' திட்டம், குற்றவியல் சட்டத்தில் ஒரு முக்கிய பகுதியாக ஆக்கப்பட்டது; இத்திட்டத்தைச் செவ்வனே செயல்படுத்த நன்னடத்தை அலுவலர்களும் நியமிக்கப்பட்டனர். இப்பொழுது இத் திட்டம் உலகின் பெரும்பான்மையான நாடுகளில் செயல்படுகிறது. எனவே, இதற்கு வித்திட்ட 'ஜான் அகஸ்டஸ் அவர்களை, 'நன்னடத்தைத் திட்டத் தந்தை எனல் மிகையாகாது'!

**இந்தியாவில் நன்னடத்தைத் திட்டம் !**

இந்தியாவில், குற்றவியல் நடைமுறை (பழமை) சட்டப் பிரிவு 562ல் நன்னடத்தைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. 1923ல் கொணர்ந்த திருத்தத்தின்படி, குற்றவாளி 21 வயதிற்கு மேற்பட்ட ஆணாயிருப்பின்—ஓர் ஆண்டுத் தண்டனைக்குட்பட்ட குற்றம் புரிந்திருப்பின்—நன்னடத்தைப் பொறுப்பில் விடுதலை வழங்கலாம். குற்றவாளி பெண்ணாகவோ (பெண்ணிற்கு வயது வரம்பு இல்லை), 21 வயதிற்குட்பட்ட ஆணாகவோ இருப்பின், ஆயுட் தண்டனை அல்லது மரண தண்டனைக்குரிய குற்றங்கள் நீங்கலாகப் பிற குற்றம் இழைத்திருப்பின், நன்னடத்தைப் பொறுப்பில் விடுதலை அளிக்கலாம். ஆனால் முதன்

முறைக் குற்றவாளிகளுக்கு (First offenders) மட்டுமே இத்திருந்தும் வாய்ப்பு நல்கப்பட்டது. மேலும், குற்றவியல் முதல் வகுப்பு நீதிபதிகளுக்கு மட்டுமே இவ்வதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு நன்னடத்தைப் பொறுப்பு விடுதலை, ஒரு வரையறைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

### தமிழ்நாட்டில் நன்னடத்தைத் திட்டம் !

இதன்பின் பல்வேறு மாநிலங்களிலும் நன்னடத்தைத் திட்டத்திற்கென விரிவான தனித் தனிச் சட்டங்கள் இயற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. தமிழ்நாட்டில் குற்றவாளிகள் நன்னடத்தைச் சீர்திருத்தச் சட்டம் 16—2—1937ல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இச் சட்டம், முதலில் குறிப்பிட்ட குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 562ன் விரிவேயாம். இச்சட்டத்தின்படி குற்றவாளிகளைப் பற்றி விசாரணை செய்து நீதிமன்றத்திற்கு அறிக்கை யளிக்கவும், அவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர்களை மேற்பார்வை செய்யவும் நன்னடத்தை அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர்.

### குற்றவாளிகள் நன்னடத்தைச் சீர்திருத்தச் சட்டம்

1958ல் இந்திய நாடாளுமன்றத்தில் மைய அரசால், குற்றவாளிகள் நன்னடத்தைச் சீர்திருத்தச் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. 1—5—1964 முதல் இச்சட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் இச் சட்டத்தின் கீழ் 18 வயதிற்கு மேற்பட்ட குற்றவாளிகளும், தமிழ்நாடு சிறுவர் சட்டத்தின் கீழ் 18 வயதிற்குட்பட்ட இளங் குற்றவாளிகளும் விசாரிக்கப்படுவர்.

**இச்சட்டம், குறிப்பிடத்தகுந்த குற்றவாளிகளைச் சிறைக்கனுப்பாமல், நன்னடத்தைப் பொறுப்பில் விடுவிக்க வழி வகுப்பதுடன், குற்றத்தால் பாதிப்புற்றோருக்கு இழப்பீடு பெற்றுத்தரவும் நீதிமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கிறது.**


ஆயுட் தண்டனை, மரண தண்டனை நீங்கலாகப் பிற தண்டனைக்குரிய குற்றவாளிகள் எவரையும் இச்சட்டத்தின் கீழ் விடுவிக்கலாம்.

அதுபோல், முன் தண்டனை இருந்தாலும் எவ்வயதினராய் இருந்தாலும் இச்சட்டத்தின் கீழ் விடுவிக்கலாம்.

மேலும், மிகச் சிறு குற்றம் புரிந்த முதன் முறைக் குற்றவாளிகளை மன்னித்து எவ்வகைப் பொறுப்பும் கோராமல், கண்டித்து விடுவிக்கவும், நீதிமன்றங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் கீழ் விடுவிக்கும் அதிகாரத்தை எல்லா வகை நீதிமன்றங்களும் பயன்படுத்தலாம்.

இச்சட்டத்தின் பிரிவு 12ன் படி —பிற தகுதிகள் இருக்கும்பொழுது — இச்சட்டத்தின்கீழ் விடுவிக்கப் பெற்றது தகுதிக் குறைவாகக் கருதப்பட மாட்டாது. இச்சட்டத்தின் கீழ் விடுவிக்கப் பெற்றவர் அரசு வேலைக்குச் செல்லவோ, தேர்தலில் நிற்கவோ எவ்வகைத் தடையும் இல்லை.



## குற்றவாளிகளின் மறுவாழ்வுக்கு உதவ வேண்டும்

"குற்றவாளிகளை அவர்களது இல்லங்களில் சந்திக்க வேண்டும். தன்னலமற்ற தொண்டு, அன்பு ஆகியவற்றின் மூலம் அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாதல் வேண்டும்; அவர்களைத் தீய பழக்க வழக்கங்களிலிருந்தும் பிரித்து, நேர்மையான வாழ்க்கை முறையைக் கற்றுக் கொடுத்து அவர்களது மறுவாழ்வுக்கு உதவ வேண்டும்''.

—காந்தியடிகள்

(அரிசன் மார்ச்சு 16,1944)

### தமிழ்நாடு சிறுவர் சட்டம்

இளங் குற்றவாளிகள் சீர்திருத்தத்திற்கென இச் சட்டம் அமைக்கப்பட்டது. 18 வயதிற்குட்பட்ட குற்றவாளிகளை நன்னடத்தைப் பொறுப்பில், பெற்றோர் அல்லது பாதுகாவலர் பொறுப்பில் ஒப்படைக்கவும், சமுதாயத்தோடு வாழ்ந்து சீர்திருத்தும் பக்குவம் பெறுதோரைச் சீர்திருத்தப் பள்ளிகளுக்கு அனுப்பவும் இச்சட்டம் வழி வகுக்கிறது. மேலும், அனாதைக் குழந்தைகளைப் பேணுவதற்கும், பெற்றோர்க்குக் கட்டுப்படாச் சிறுவர்களின் சீர்திருத்தத்திற்கும், சிறுவர்களைக் குற்றம் புரியத் தூண்டும் பெரியவர்களையும் குழந்தைகளுக்குக் கொடுமை இழைப்போர்களையும் தண்டிப்பதற்கும் இச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

### நன்னடத்தை அலுவலர்

மேற்குறித்த சட்டங்களின் கீழ்ச் சீர்திருத்தப் பணி புரிய அரசால் நியமிக்கப்படும் அலுவலர்களே ''நன்னடத்தை அலுவலர்கள்'' ஆவர். அவர்கள் ஆற்றும் பணிகளுள் சில.

1. குற்றவாளிகள் நன்னடத்தைச் சீர்திருத்தச் சட்டம், தமிழ்நாடு சிறுவர் சட்டம், பரத்தைமைத் தடுப்புச் சட்டம், பார்ஸ்டல் பள்ளிச் சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ், நீதி மன்றங்கள் குற்றவாளியைப் பற்றிக் கேட்கும் முன் விசாரணை அறிக்கையை அளிக்கிறார். இதற்கு நன்னடத்தை அலுவலர்கள், குற்றவாளியை நேரில் பார்வையிட்டு, அவர் ஆளுமை, மனநிலை, ஒழுக்கம், நடத்தை, முன் குற்ற விவரம், குற்றம் புரிந்த பின் ஏற்பட்ட மாற்றம், குற்றவாளிக்கும் பிறருக்கும் உள்ள தொடர்பு, குற்றவாளி திருந்துவதற்கான சூழ்நிலை ஆகியவற்றை ஆய்ந்து தக்க பரிந்துரை

## உடல் என்னும் இயந்திரத்தைப் பாழ்படுத்தலாமா?

மனிதனுடைய தேகத்திற்கு என்ன விலை மதிப்பிடலாம்?

கோடி ரூபாய் கொடுத்தாலும் இந்த இயந்திரத்தை நம்மால் செய்ய முடியாது. தன்னைத் தானே பழுதுபார்த்துக் கொள்ளும் விசித்திர சக்தி அதற்குண்டு. பகுத்தறிவு என்னும் அதிநுட்பமான சக்தி இந்த இயந்திரத்தின் ஒரு சிறப்பான அமைப்பு.

இந்த அமைப்பு, கெட்டுப் போகும்படியாகக் கள்ளையும், சாராயத்தையும் உள்ளே கவலையின்றிச் செலுத்துவது என்ன அறியாமை?

தினம் ஒரு தடவை கெட்டுப்போய், தடுமாறி, தலைகீழாக நடத்தப்பட்டுவந்தால் எந்த இயந்திரம்தான் வேலை செய்யும்? விலை மதிப்பற்ற ஓர் இயந்திரத்தை இங்ஙனம் பாழ் படுத்தலாமா?

—இராஜாஜி

('மதுவிலக்கு' என்னும் நூலிலிருந்து...)

யுடன் அறிக்கையை அளிக்கிறார். குற்றவாளி நன்னடத்தை அலுவலரது மேற்பார்வையில் வைக்கப்படும் பொழுது, அவரைப் பார்வையிட்டுத் தக்க வழிகாட்டியாகவும், ஆசானாகவும், நண்பனாகவும் விளங்கி, குற்றப் பாதையில் இருந்து திருப்பி நல்வழிப்படுத்துகிறார்.

2. சிறையிலுள்ள தண்டனை வாசிகளை (குறிப்பாக ஆயுட் தண்டனைவாசிகளையும், நீண்ட காலத் தண்டனைவாசிகளையும்) தண்டனைப் பருவம் முதிரும் முன் விடுதலை புரிய நன்னடத்தை அலுவலர் அறிக்கை அளிக்கிறார். இவ்வாறு முன் கூட்டி விடுதலை செய்யப்படுபவர்கள், நன்னடத்தை அலுவலரின் மேற்பார்வையில் வைக்கப்பட்டு அவரது முயற்சியால் மறுவாழ்வு பெறுகின்றனர்.

3. சீர்திருத்தப் பள்ளி, பார்ஸ்டல் பள்ளி (இளைஞர் சிறைப் பள்ளி), விழிப்புப் பணி இல்லம் ஆகியவற்றில் உள்ளவர்களின் விடுதலைக்கும் (License Release), விடுப்பில் விடுவதற்கும் அறிக்கை யளிக்கிறார். இவர்களும் நன்னடத்தை அலுவலரின் கண்காணிப்பில் விடப்பட்டு மறுவாழ்வு அடைகின்றனர்.

4. பரத்தைமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் (Suppression of Immoral Traffic in women and girls Act) கைதான பெண்களுக்குப் பிணையம் தர முன் வருவோரின் நடத்தை, தகுதி, நோக்கம் குறித்து 'இரகசிய விசாரணை' செய்து, நடுவர் மன்றத்திற்கு அறிக்கை யளிக்கிறார்.

5. சிறைவாசிகளின் குடும்ப நலனில் கருத்துச் செலுத்துகிறார்.

6. சீர்திருத்தப் பள்ளி, விழிப்புப் பணி இல்லங்களிலுள்ள பெண்களைத் திருமணம் புரிய விழைவோரின் விண்ணப்பங்களை ஆய்வு செய்து பரிந்துரைக்கிறார்.

7. இதுபோல் சீர்திருத்த இல்லங்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு இல்லங்களிலுள்ள குழந்தைகளைத் தத்தெடுக்க விரும்புவோரின் விண்ணப்பங்களையும் ஆய்வு செய்து பரிந்துரை செய்கிறார்.

8. தனியார் சீர்திருத்தப் பள்ளிகளை மாதந்தோறும் ஆய்வு செய்கிறார்.

9. கிளைச் சிறைகளைப் பார்வையிடுகிறார்.

10. அடிக்கடி குற்றம் புரிவோரை, வழக்கமாகக் குற்றம் புரிவோர் நடவடிக்கையைக் கட்டுப்படுத்தும் சட்டத்தின் (Tamil Nadu Restriction of Habitual Offenders Act), கீழ்க் கொணர்வது பற்றி மாவட்ட ஆட்சியாளருக்கு அறிக்கையளிக்கிறார்.

11. 'திருமண விலக்கு' வழக்குகளில் கணவன்-மனைவியரிடையே ஒற்றுமையை ஏற்படுத்தி, மீண்டும் மணவாழ்க்கையில் ஈடுபடச் செய்கிறார்.

நன்னடத்தை அலுவலரது மறுவாழ்வு முயற்சிகளுக்கு, சுழற் கழகம் (Rotary Club), அரிமா சங்கம் (Lions Club), இளைஞர் கழகம் (Jaycees), சிறையிலிருந்து விடுதலையானவர்களின் நல மன்றம், வங்கிகள், அரசுத் துறைகள் ஆகியவை ஒத்துழைப்புத் தருகின்றன. நன்னடத்தைத் துறை—காவல் துறை—நீதித் துறை ஆகியவற்றின் ஒருங்கிணைந்த ஒத்துழைப்பிற்காக, நன்னடத்தை அலுவலர் பல்வேறு கூட்டங்களிலும் குழுக்களிலும் கலந்து கொள்கிறார். காவல் துறையினர் குற்ற ஆய்வுக் கூட்டங்களில் (Crime Meeting) கலந்து கொள்வதோடு, அடிக்கடி நீதிபதிகளையும் சந்திக்கிறார். சிறைவாசிகள் விடுதலைக்கான அறிவுரைக் கழகக் குழுவிலும் (Advisory Board) சீர்திருத்தப் பள்ளிகளில் உள்ள பார்வையாளர் குழுவிலும் (Visiting Committee) விடுதலையானவர்களின் மாவட்ட வளர்ச்சிக் குழுவிலும், சிறையிலிருந்து விடுதலையானவர்களின் நல மன்றத்திலும், மண்டல நன்னடத்தை அலுவலர் அங்கம் வகிக்கிறார்.

### சிறைத் துறையின் நன்னடத்தைப் பிரிவு

தமிழ்நாட்டில் நன்னடத்தைப் பணியானது, சென்னை குழந்தைகள் நலக் கழகத்தாலும், சிறையிலிருந்து விடுதலையானவர்களின் நல மன்றத்தாலும் நியமிக்கப்பட்ட நன்னடத்தை அலுவலர்களால் 1946, மே திங்கள் வரை ஆற்றப்பட்டது. 1946ல் நன்னடத்தை அலுவலர்களைக் கொண்டு தொடங்கிய இப்பிரிவானது இன்று தனித் துறையாய் 96 நன்னடத்தை அலுவலர்களையும் 12 மண்டல நன்னடத்தை அலுவலர்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. ஒவ்வொரு நன்னடத்தை அலுவலரும், ஏறத்தாழ இரண்டு நீதிமன்ற வரம்பிற்குட்பட்ட பணிகளைப் பார்க்கின்றனர். நன்னடத்தைப் பணியின் முழு மேற்பார்வையையும், சிறைத் துறைத் தலைவரின் அறிவுரையின் படி தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் மேற்கொள்கிறார்.

இவ்வாறு குற்றவாளிகளை மிகக் குறைந்த செலவில் சீர்திருத்தி, சமுதாயப் பாதுகாப்பில் தனியிடம் பெறும் நன்னடத்தைத் திட்டத்தில் தமிழ்நாடு முன்னோடியாக உள்ளதுடன், அனைவரும் இறும்பூதெய்தும் வண்ணம் செம்மையாகவும் செயல்படுகிறது. இச்சீரிய திட்டம் மேலும் சிறப்புற, பொது மக்களும் தங்களால் இயன்ற ஒத்துழைப்பை நல்கிக் குற்றவாளிகள் சீர்திருத்தத்தில் பங்கு பெறுவார்களாக!

இ. திருவள்ளுவன்,
நன்னடத்தை அலுவலர்,
மதுரை.

கெ. முத்துசாமி,
நன்னடத்தை அலுவலர்,
திருநெல்வேலி.

வள்ளலார் நகரில் நடைபெற்ற என் உறவினர் வீட்டுத் திருமண விழாவில் கலந்து விட்டுப் பேருந்து நிலையத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்தேன். 'மிண்ட்' என்று அழைக்கப்பட்டு வந்த தங்கச் சாலைத் தெருவின் இறுதியில் கோட்டை வாயில்கள் போன்று அகன்ற வாசல்கள் கொண்டு விளங்கும் அரசினர் அச்சகம் என் கண்ணிற்பட்டது. அதன் உள்ளிருந்து வெளிவந்து கொண்டிருந்த என் நண்பர் ஒருவரும் என் கண்களில் பட்டார். அவர் அரசுப்பணியாளர் அல்லர். சில பத்திரிகைகளில் கதைகள் எழுதிவரும் எழுத்தாளர் அவர். எனவே அவருக்கும் அரசினர் அச்சகத்துக்கும் என்ன தொடர்பு இருக்க முடியும் என்று நினைத்தேன். என் நினைப்பைக் கேள்வியாகத் தொடுத்தேன்.

''என்ன பிரதர்! அரசு அச்சகத்துக்குள்ளேயிருந்து வர்றீங்களே!'' என்றேன்.

''அது ஒரு கதை சார்!'' என்றார்.

''எழுத்தாளர்களுக்கே எதை எடுத்தாலும் கதையாகத்தான் சார் தோணும்! விவரமாகச் சொல்லுங்க'' என்றேன் நான்.

''சார்! என் பேரை 'இந்திரஜித்'துன்னு அதிகாரபூர்வமா மாத்திக்கிட்டேன். ரெண்டு மாசத்துக்கு முந்திய அரசாங்க கெஜட்டிலே அது பிரசுரமாகியிருக்குது. அந்த கெஜட்டிலே ஒரு பிரதியை வாங்கிக்கிட்டுப் போகலாமுன்னு இங்கே வந்தேன். வந்தா....இங்கே கெஜட்டை விற்கிறது கெடையாதுங்கருங்க''—கவலையுடன் சொன்னார் நண்பர்.

உடனே நான் குறுக்கிட்டேன்.

''ஆமா சார்! அரசாங்க அச்சகத்திலெ அச்சுமட்டும்தான் அடிப்பாங்க! விற்பனை செய்ய மாட்டாங்க! அரசாங்க வெளியீடுகளை விக்கிறதுக்குன்னே, அண்ணாசாலையிலெ அரசினர் அச்சகம், வெளியீட்டு விற்பனை நிலையம்னு ஒண்ணு இருக்குது. அங்கே போயி நாம நமக்குத் தேவையான கெஜட்டைப் பணம் கொடுத்து வாங்கிக்கலாம்! ஒங்களை மாதிரி எழுத்தாளர்களுக்கே இது தெரியலியே!'' என்றேன்.

''நான் ஒருத்தன் மட்டுமில்ல சார்! ரொம்பப் பேர் இப்படித்தான் அரசாங்க அச்சகத்திலெ கெஜட் விற்பனைக்குக் கெடைக்குமுன்னு தப்பா நெனைச்சுக்கிட்டிருக்கிறாங்க. எனக்கு முன்னாலே போயிக்கிட்டிருக்கிறாங்களே ரெண்டுபேரு, அவங்களும் என் கேசுதான்!'' என்று சொல்லிய நண்பர் என்னையும் தன்னுடன் வருமாறு கேட்டுக் கொண்டார். நண்பரின் வேண்டுகோளை ஏற்று அவருடன் சென்றேன்.

அண்ணாசாலையில் பூம்புகார் விற்பனை நிலையத்திற்கு அடுத்தாற்போல் உள்ளது, அரசினர் அச்சகம்—வெளியீட்டு விற்பனை நிலையம்; முன்பெல்லாம் இந்த நிலையம் இங்கே இருப்பது எளிதில் கண்ணில் படுவதில்லை. தற்போது அப்படியில்லை. அங்கே என்னென்ன புத்தகங்கள் கிடைக்கும் என்ற செய்தியைத் தெரிவிக்கும் வகையில், பல சுவரொட்டி அட்டைகள், வெளிப்புறக் கம்பி வேலியில் தொங்கவிடப்பட்டிருப்பதால் விற்பனை நிலையம் நம் கண் பார்வையிலிருந்து தப்புவதில்லை.

உள்ளே நுழைந்தோம்.

Tamilnadu Govt. Publication Dept., என்று ஆங்கிலத்திலும், 'அரசினர் அச்சகம்—வெளியீடுகள் விற்பனை நிலையம்' என்று தமிழிலும் எழுதப்பட்டுள்ள விளம்பரப் பலகை எங்களை வரவேற்கிறது. விற்பனைப் பிரிவில் உள்ள ஊழியரிடம் தனக்குத் தேவையான தேதியுள்ள கெஜட் இருக்கிறதா எனக் கேட்டார் நண்பர்.

''இதோ இந்த மேஜையில் மூணு மாச கெஜட் மொத்தமா இருக்கு! இதிலெ ஒங்களுக்குத் தேவையான செய்தி வெளியாகியிருக்கிற கெஜட் இருக்குதா பாருங்க!'' என்று ஒரு தொகுப்பைக் காண்பித்தார், ஊழியர்.

நண்பர் அந்தத் தொகுப்பைச் சில நிமிடங்கள் புரட்டிப் பார்த்தார். பிறகு ஒரு கெஜட்டைக் காண்பித்து ''இதிலெ வந்திருக்குதுங்க'' என்றார்.

''முழு கெஜட்டும் வேணுமா! இல்லெ பாகம் மட்டும் போதுமா?'' என்று கேட்டார் ஊழியர்.

6 பாகம் கொண்ட கெஜட், பாகம் பாகமாகவும் விற்பனை செய்யப்படுகிறதாம். நண்பரின் பெயர் மாற்றம் செய்யப்பட்ட செய்தி பாகம்-6, பிரிவு-4 ( Part VI Section 4 ) என்ற பகுதியில் பிரசுரமாகியிருந்தது. எனவே அதுமட்டும் போதும் எனச் சொல்லி, அதற்குரிய




# அரசினர் அச்சகம் வெளியீடுகள் விற்பனை நிலையம்

தொகையைச் செலுத்தினர் நண்பர். அவர் குறிப்பிட்டுக் கேட்ட கெஜட்டுடன், அதற்குரிய பில்லையும் சேர்த்துத் தந்தார் ஊழியர்.

''பழைய கெஜட் ஒருவருக்குத் தேவைப்படுது! அது ஓங்ககிட்டெ கெடைக்குமா?'' என்று சந்தேகத்தை ஊழியரிடம் கேட்டேன்.

''கெடைக்கும்னு உறுதியாச் சொல்ல முடியாது! ஒருவேளை ஸ்டாக் இருக்கலாம். சில சமயங்களில் இல்லாமலும் போகலாம். அப்படி ஸ்டாக் இருந்துச்சுனு, ஒரு வருஷத்துக்குள்ளெ உள்ள கெஜட்டை ஒரிஜினல் விலைக்கே தர்றோம். 3 வருஷத்துக்கு முந்தினதா இருந்தா, தேடு கூலி 3 ரூபா சேர்த்து வாங்கிக்குவோம்'' என்றார் ஊழியர்.

''குறிப்பிட்ட ஒரு கெஜட்டை வழக்கு மன்றத்தில் சான்று காட்டவேண்டிய சூழ்நிலை ஒருவருக்கு ஏற்படுகிறது. அந்த கெஜட் அவரிடத்தில் இல்லை; இந்த விற்பனை நிலையத்திற்கு வந்து கேட்கிறார்; இங்கேயும் இருப்பில் இல்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் பிரச்சினையை எப்படிச் சமாளிப்பது!?''-இந்தச் சந்தேகத்தை ஊழியரிடம் கேட்டேன்.

உடனே அவர் அளித்த மறுமொழி இதுதான்:

''குறிப்பிட்டுள்ள தேதியுள்ள கெஜட் இங்கே இருப்பில் இல்லை என்று விற்பனை அதிகாரியிடமிருந்து ஒரு கடிதத்தைப் பெற்றுக் கொண்டு, எழும்பூரில் உள்ள ஆவணக்காப்பகத்தில் ( Record Office ) காண்பிக்க வேண்டும். அத்துடன் 3 ரூபாய் செலுத்த வேண்டும். அந்த அலுவலகத்தார், குறிப்பிட்ட கெஜட்டின் தேவையான பகுதிகளைத் தட்டச்சுச் செய்து சான்றிதழ் அளிக்கப்பட்ட நகலாகக் கொடுப்பார்கள். அந்த நகல் பிரதியை வழக்குமன்றத்தில் காட்டுவதற்கு அனுமதி உண்டு.

''பல வருடங்களுக்கு முன்பு இப்படிக் கிடையாது. கெஜட்டின் மூலப் பிரதியையே சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. தற்போது இந்த விதி மாற்றப்பட்டுள்ளது. இது, பொதுமக்களுக்கு மிகுந்த அனுகூலமாக இருக்கிறது'' என்று ஊழியர் குறிப்பிட்டார்.

''கெஜட்டைப்பற்றி மேலும் பல விவரங்களை அறிந்துகொள்ள வேண்டுமென்றால் விற்பனை அதிகாரியை நாடுங்கள்!'' என்று ஊழியர் சொல்லவே, அதன்படி விற்பனை அதிகாரியைச் சந்தித்து விவரங்களைக் கேட்டோம். அவர் அளித்த தகவல்கள் வருமாறு:



விற்பனைப் பிரிவு

முன்பு Fort Saint George Gazette என்று வழங்கப்பட்டு வந்த கெஜட், தற்போது 'தமிழ்நாடு கவர்ண்மெண்ட் கெஜட்' என்ற பெயரில் வெளியிடப்படுகிறது. ஒவ்வொரு வாரமும் புதன்கிழமையன்று வெளிவருகிறது. இது, கெஜட்டின் முதற்பக்கத்தில் தமிழக அரசின் சின்னத்துடன் ஆங்கில வருடம், மாதம், தேதி அச்சிடப்பட்டிருப்பதுடன் தமிழ் வருடம், மாதம், தேதியும் திருவள்ளுவர் ஆண்டும் அச்சிடப்பட்டுள்ளன. கெஜட்டின் மிகக் குறைந்த விலை 10 காசுகள்; மிக உயர்ந்த விலை ரூபாய் 6.

கெஜட் ஆறு பகுதி கொண்டதாகும். ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு வகைச் செய்திகள் வெளியிடப்படுகின்றன. கெஜட் இதழ் பதிவு பெற்ற அலுவலர்களின் முதல் நியமனம் குறித்துத் தலைமைச் செயலகம் அறிவிக்கும் அறிவிப்புகள், ஆணைகள், அலுவலர்கள் பணியிலிருந்து ஓய்வு பெறும் விவரங்கள்போன்ற செய்திகள் பகுதி 1-ல் வெளியிடப்படுகின்றன.

பொதுமக்களின் கவனத்தில் உள்ள சில குறிப்பிட்ட விஷயங்கள் குறித்துத் தலைமைச் செயலகத்தால் அறிவிக்கப்பெறும் அறிவிப்புகள் அல்லது ஆணைகள் (வரிவிதிப்பு, ஆயத்தீர்வை, விற்பனை வரி ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்கள், அத்தியாவசியப் பொருள்களின் விநியோகச் சீரமைப்பு), மற்றும் பொதுமக்களில் ஒருசாராருக்குத் தேவைப்படும் செய்திகள் (மோட்டார் வாகனச் சட்டப்படி ஒரு வாகனத்துக்கு வரியிலிருந்து விலக்கு அளித்தல், நில ஆர்ஜிதம் செய்தல், கடன் அறிவிப்புகள், பெருந்துத் தடங்கள் நாட்டுடைமையாக்கப்படுதல்) ஆகியவை பகுதி 2-ல் வெளியிடப்படுகின்றன.

தலைமைச் செயலகத்தின் பல்வேறு துறைகளால் அறிவிக்கப்படும் பொதுவான சட்ட விதிகள், அறிவிப்புகள், ஆணைகள், (சென்னை மருந்தாளர் குழு விதிகளில் செய்யப்படும்மாற்றங்கள்), இந்திய அரசியலமைப்பின் அனுமதியின் கீழ் அறிவிக்கப்பெறும் அரசுப் பணி விதிகள், ஒழுங்குமுறை விதிகள், அறிவிப்புகள் (மாநிலப்பணி மற்றும் சார்நிலைப் பணிகளுக்குரிய சிறப்பு விதிகளில் செய்யப் பெறும் திருத்தங்கள்), துறைகளின் தலைமை அலுவலகங்களால் அறிவிக்கப் பெறும் அறிவிப்புகள், ஆணைகள் ஆகியவை பகுதி 3-ல் வெளியிடப்படுகின்றன.

தமிழ்நாடு அரசின் மசோதாக்கள், சட்டங்கள், நெருக்கடி நிலைச் சட்டங்கள், மைய அரசின் மசோதாக்கள், நெருக்கடி நிலைச் சட்டங்கள் ஆகியவை, பகுதி 4-ல் வெளியிடப்படுகின்றன.

தமிழ்நாடு அரசின் பொது (தேர்தல்) துறையின் அறி

விப்புகள், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் பட்டியல் குறித்து மாவட்ட ஆட்சியாளர்களும் தேர்தல் அலுவலர்களும் அறிவிக்கும் அறிக்கைகள், தேர்தல் வழக்குகள் ஆகியவையும், அரசியல் அமைப்பின் 192-வது விதிப்படி மாநிலச் சட்ட மேலவை உறுப்பினரின் தகுதியின்மை குறித்துத் தமிழக ஆளுநரின் தீர்ப்பு, இந்தியத் தேர்தல் ஆணைக்குழுவின் அறிவிப்புகள் ஆகியவை, பகுதி 5-ல் வெளியிடப் பெறுகின்றன.

பொதுமக்களுக்குத் தேவையான சில விஷயங்கள் குறித்து, துறைத் தலைமை அலுவலகங்கள் தரும் அறிவிப்புகள், பொதுமக்களில் ஒரு சாராரின் கவனத்துக்குரிய அறிவிப்புகள், மாநில, மைய அரசுகளைச் சார்ந்த-செலவுத் தொகை திரும்ப வசூலிக்கும் நிறுவனங்கள் தரும் அறிவிப்புகள், அரசுத்துறையைச் சார்ந்த நிறுவனங்கள் தரும் அறிவிப்புகள், தனிப்பட்டவர்களும் தனியார் துறை நிறுவனங்களும் தரும் விளம்பரங்கள் (பெயர் மாற்றம் செய்தல், கம்பெனிச் சட்ட அறிக்கைகள்) ஆகியவையும், புள்ளி விவர இயலின் இணைப்புகளும் பகுதி 6-ல் வெளியிடப்படுகின்றன.

தேடிவந்த கெஜட், கிடைத்து விட்ட மகிழ்ச்சியுடன் நாங்கள் புறப்பட்டோம்.

அப்போது ஒருவர் ''S. R. இருக்குதுங்களா?'' என்று கேட்டபடி விற்பனை நிலைய ஊழியரை நோக்கி வந்தார்.

''இருக்குது! 2 ரூபாய் 67 பைசா கொடுங்க'' என்றார் ஊழியர். மறு நிமிடம் பணத்தை வாங்கிக் கொண்டு, S. R.-ஐ அவரிடம் கொடுத்தார் ஊழியர்.

''எஸ். ஆர். என்றால் என்ன?'' என் எழுத்தாள நண்பர் என்னிடம் வினவினார்.

''எஸ். ஆர். என்றால் 'சர்வீஸ் ரிஜிஸ்திரர்' என்றும், இது அரசாங்க ஊழியர்களுக்குத் தேவைப்படுவது'' என்றும் நண்பருக்கு விளக்கம் செய்தேன்.

மாதத்தின் முதல் இரு வாரங்களில் நாளொன்றுக்கு 85 வீதமும் 3-வது, 4-வது வாரங்களில் நாளொன்றுக்கு 60 வீதமும் 'எஸ். ஆர்.' விற்பனையாகிறது.

முன்பெல்லாம் ஓர் அரசு ஊழியர், தமது அதிகாரியிடமிருந்து வேண்டுதல் கடிதம் பெற்று வந்தால்தான், அவருக்கு 'எஸ். ஆர்.' கொடுக்கப்பட்டு வந்தது. தற்போது எவ்விதச் சான்றிதழும் இன்றி, அரசு ஊழியர் இதனை வாங்கிக் கொள்ளலாம்.

முன்பெல்லாம், வெளி மாவட்டங்களில் உள்ள அரசு ஊழியர்களும் 'எஸ். ஆர்.'-க்காக இந்த விற்பனைநிலையத்தை நாடவேண்டியிருந்தது. கடந்த இரண்டாண்டுகளாக அப்படி இல்லை. வெளி மாவட்டங்களில் உள்ள கருவூலங்களுக்கு ( Treasuries ) அவை அனுப்பப்படுகின்றன. அந்தந்த மாவட்டத்து அரசு ஊழியர்கள், மாவட்டக் கருவூலத்திலிருந்து வாங்கிக் கொள்ளலாம்.

இவை தவிர, தமிழ்நாடு தேர்வு ஆணைக்குழுவின் தகவல் ஏடும் (Tamilnadu Public Service Commission Bulletin ) இங்கு விற்பனை செய்யப்படுகிறது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழு நடத்தும் தேர்வு குறித்த விளக்கங்களும், தேர்வு முடிவுகளும் இந்தத் தகவல் ஏட்டில் வெளியிடப்படுகின்றன. 50 காசு விலையுள்ள இந்தத் தகவல் ஏடு, பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை வெளியிடப்படுகிறது.

அவ்வப்போது தமிழ்நாடு அரசாங்கம் வெளியிடுகின்ற பல் வேறு நூல்களும், மைய அரசின் நூல்களும் தமிழ்நாடு அரசு நிறைவேற்றியுள்ள சட்டங்களும் அவற்றின் விவரங்களும் கொண்ட நூல்களும் இங்கே விற்பனை செய்யப்படுகின்றன.

தமிழ்நாடு நில உச்சவரம்புச் சட்டம், தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டம், சென்னை நகரக் காவல்துறைச் சட்டம், தமிழ்நாடு பயிரிடுவோர் பாதுகாப்புச் சட்டம், வாக்குச் சாவடிகளில் உள்ள தேர்தல் முகவர்களுக்குரிய தகவல்கள். ஆகியவை இங்கே விற்பனை செய்யப்படும். நூல்களில் குறிப்பிடத்தக்கவை. இவையெல்லாம் பெரும்பாலும் ஆங்கில மொழியில் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சட்டப் பேரவையிலும், சட்ட மன்ற மேலவையிலும் நடைபெறுகின்ற விவாதங்கள் நூலாக வெளியிடப்பட்டு இங்கே விற்பனை செய்யப்படுகின்றன. சட்டப்பேரவை விவாத நூல் 50 காசு விலையிலும், மேலவை விவாத நூல் 30 காசு விலையிலும் விற்கப்படுகின்றன.


தினமும் காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரையிலும், சனிக்கிழமையில் காலை 9 மணி முதல் 12.30 மணி வரையிலும் இயங்குகிறது இந்த வெளியிடுகள் விற்பனை நிலையம். ஞாயிறு விடுமுறைநாள்.


அண்மையில் (23-9-'77) இந்த விற்பனை நிலையத்தின் கிளை நிலையம் ஒன்று உயர்நீதி மன்றக் கட்டடத்திற்குள் திறக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர்களுக்கும் நீதிபதிகளுக்கும் இந்தப் புதிய நிலையம் மிகுந்த உதவியாக இருக்கிறது.

மொத்தத்தில் நாட்டுக்குத் தேவையான மாபெரும் பணியை அரசினர் அச்சகம்-வெளியீடுகள் விற்பனை நிலையம் அமைதியாகவும் ஆரவாரம் இன்றியும் செய்து வருவது பாராட்டுக்குரியது என்ற எண்ணத்துடன் நானும் என் நண்பரும் இல்லம் திரும்பினோம்!

**—எஸ். சண்முகசுந்தரம், பி.லிட்.**

அரசு வெளியீடுகள்





## ஆடுவளர்ப்புக்கு முதலாவது பெரிய திட்டம்!

ரூ. 30 கோடி செலவில் தமிழ்நாட்டில் தரமான ஆடுகள் வளர்க்கும் பண்ணை அமைக்கும் திட்டம் ஒன்று மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதற்கு உலக வங்கி உதவி கிடைக்கும்.

''சமீபத்தில் உலக வங்கி அலுவலர் திரு சென் அவர்கள் தமிழ்நாட்டிற்கு வருகை தந்த போது இந்தத் திட்டம் பற்றி அரசு கால்நடை அலுவலர்களுடன் விவாதித்தார். இத் திட்டம் பற்றி அவர் மிகவும் மகிழ்ச்சி தெரிவித்தார். முழு விவரங்களுடன் இந்தத் திட்டத்தை அனுப்பி வைத்தால், உலக வங்கி இதற்கு நிச்சயம் உதவி செய்யும் என்றும் அவர் வாக்களித்துள்ளார். அதன்படி இத் திட்டம் அனுப்பப்பட்டுள்ளது. சீக்கிரமே அனுமதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.''

இந்தத் திட்ட அமலுக்குத் தென்னார்க்காடு மாவட்டக் கோடியில் சேலத்திற்கு அருகே, சின்ன கல்ராயன் மலைப் பிரதேசப் பகுதி தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது. வேளைக்கு ஒன்றரை லிட்டர் பால் தரக்கூடிய ஆடுகள் உண்டு. தீவனச் செலவோ மிகக் குறைவு. அது மாத்திரமல்ல. நல்ல கம்பள ரோமம், மாமிசம் ஆகியவைகளுக்குப் பயன்படும் தரமான ஆடு வகைகளும் உள்ளன.

அரசே இந்த ஆட்டுப் பண்ணையை அமைத்து ஒரு கூட்டுறவு அமைப்பு மூலம் இணைத்துப் பராமரித்து வரும். இத்தகைய ஆடுகள் மூலம் இன விருத்தியும் செய்யப்படும். இதனால் கிராம மக்களின்—அதிலும் குறிப்பாக, பின் தங்கிய மாவட்டமான சேலம் பகுதியில் அமைவதாக இருப்பதால் அந்த மாவட்டத்தின் முன்னேற்றத்திற்கு இது மிகவும் உதவும். இவ்வகையில் இத்திட்டம் இந்தியாவிலேயே முதலாவது திட்டமாகத் திகழும்.

## “நோயற்ற கால்நடை வட்டம்” ஏற்படுத்தும் திட்டம்


தமிழ்நாட்டில் திருச்சி, மதுரை, இராமநாதபுரம், கன்னியாகுமரி, கோடைக்கானல் முதலிய 7 மாவட்டங்களையும் கேரளத்தின் தென் பகுதியையும் இணைத்து, கால்நடைகளுக்கான ''நோயற்ற வட்டம்'' ஒன்று அமைக்கப் படவிருக்கிறது. இவ்வட்டப் பகுதியில் பல்வேறு தீவிர நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதன் மூலம் கால்நடைகளுக்கு இயற்கையாக வரும் கோமாரி, வெக்கை முதலிய எந்த நோயும் வராத அளவில் அப்பிரதேசத்தைக் காப்பாற்றி, கால்நடைகளுக்குப் பாதுகாப்பு அளிப்பது மாத்திரமல்லாது அவைகளின் மாமிசத்தை உலக மார்க்கெட்டுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வாய்ப்பும் ஏற்பட விருக்கிறது. இதனால் ஏராளமான அந்நியச் செலாவணி கிடைக்கும்.

இந்தத் திட்டம் மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசின் அங்கீகாரமும் உதவியும் நிச்சயம் கிடைத்து விடும் என்று நம்பப்படுகிறது.

இத் திட்டமும் இந்தியாவிலேயே முதன் முறையாக நடத்தப்படும் திட்டமாகத் திகழும்!

மேலும் இரண்டு புதுத் திட்டங்களைப் பற்றியும் கால்நடைப் பராமரிப்புத் துறை இயக்குநர் தெரிவித்தார்.

நல்ல தரமான குதிரைகள் கிடைப்பதற்காக ஹோசூரில் 'குதிரைப் பண்ணை' ஏற்படுத்தும் திட்டமும், செங்கல்பட்டு மாவட்டம் காட்டுப்பாக்கத்தில் 'நாய் வளர்ப்புப் பண்ணையும்' அடுத்த ஆண்டில் திட்டமிடப் பட்டு வருகிறது. உயர்ந்த ஜாதி நாய்களை வளர்ப்பது, அவைகளுக்கு நல்ல பயிற்சிகளை அளித்துத் தேவையான மக்களுக்கு விற்பது இதன் நோக்கம்.





# தன் கணவனையும் ஒரே குழந்தையையும் வீட்டையும் இழந்தாள் முத்தம்மா

## அவளது ஆருத்துயரினை சிறிதளவேனும் களைந்து அவளுக்கு மறுவாழ்வளிப்பது நம் கடமை

அண்மையில் கோரத்தாண்டவம் புரிந்த புயலினாலும், வெள்ளத்தினாலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டோர் முத்தம்மா மட்டுமல்ல; மற்றும் எண்ணற்றோராவர்.

இன்று அவர்களுக்குப் பெருமளவில் உதவி தேவை. இடிந்த வீடுகளை மீண்டும் கட்டிக் கொள்வதற்கும், உணவுத்தேவைக்கும். மருந்துச் செலவிற்கும், துணிமணிகள் வாங்குவதற்கும், சுருங்கக்கூறின், அவர்கள் கூடிய வரை தம் பழைய வாழ்வைத் திரும்பப் பெற, பண உதவி உடனடி அவசியமாகிறது.

ஆகவேதான் தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டத்தின் பொங்கல் சிறப்புக் குலுக்கலுக்காக வழங்கப்படும் பரிசுச் சீட்டுகளின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வருவாய் முழுவதும் இப்படிப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரண வேலைக்காக ஒதுக்கப் பட்டுள்ளது.

இன்றே ஒரு பரிசுச் சீட்டை வாங்கிடுவீர்!
புயல் — வெள்ளக் கொடுமையால் பாதிக்கப் பட்டவரின் மறுவாழ்வுக்கு உதவிடுவீர்!

எல்லா வரிசைகளுக்கும் பொதுவான சிறப்புப் பரிசுகள்

2 முதல் பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 5 லட்சம்
3 இரண்டாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 1 லட்சம்

மற்றும் பத்து வரிசைகளில் (AO முதல் AX வரை) ஒவ்வொரு வரிசையிலும் ஒவ்வொன்றும் ரூ. 50,000 மதிப்புள்ள 2 முதல் பரிசுகள் உட்பட பலபரிசுகள்.

பரிசுச் சீட்டின் விலை ரூ. 1 மட்டுமே
குலுக்கல் தேதி : 21-1-78

**தமிழ்நாடு பரிசுச் சீட்டு ஒன்றினை வாங்கி பாதிக்கப் பட்டோர்க்கு வாழ்வளிப்பீர்!**

வெளியிட்டோர்
இயக்குனர்
தமிழ்நாடு அரசு
பரிசுச் சீட்டுத் திட்டம்,
சென்னை 600 002.

# புயலே உணர்க!



கடல்மகள் பெற்ற சூறைக்
காற்றெனும் கொடிய கூற்றே!
கடும்பசி கொண்ட பேயே!
கருணையே துளியு மின்றி
நடத்திய ஊழிக் கூத்தால்
நாட்டிலே விளைந்த கோடிக்
கொடுமைகள் கண்டு நெஞ்சம்
குமைந்திட வில்லை யேயோ?

கொடும்புயற் காற்றே! உன்றன்
கொடுமைகள் போதா வென்றோ
கடும்புனல் வெள்ளந் தன்னைக்
கைத்துணை யாகக் கொண்டு
திடுமென நுழைந்தே இங்குத்
தீமைகள் புரிந்தாய்? அணைகள்
உடைத்தனை! மேலும் ஆற்றுப்
பாலங்கள் தகர்த்தொ ழித்தாய்

உடைமைகள் கெடுத்துப் பல்லோர்
உயிர்களைக் குடித்தாய்! ஊர்கள்
தடந்தெரி யாமற் செய்தாய்!
தகவல்கள் தொடர்ப றுத்தாய்
சடசட வென்றே மரங்கள்
சாய்ந்துவீழ்ந் திடவும் செய்தாய்
குடிசைகள் அழித்தாய்! மாட
கூடங்கள் சிதைத்துச் சென்றாய்!

அல்லலுற் றழுத கண்ணீர்
துடைத்(து)அவர் அல்லல் போக்க
வல்லவர் உள்ளார்: இதனை
மனத்திலே கொள்க! இங்கே
இல்லையுன் சுவடென் றுக்க
எண்ணியே அள்ளி ஈயும்
நல்லவர் கோடி கோடி
நானில மெங்கும் உள்ளார்!

புயலே! உன் .பசித்தீ தணிந்து
போயிற்றா? ஒன்று சொல்வேன்!
அயர்வின்றித் திட்ட மிட்டே
அரும்பணி யாற்று கின்ற
முயற்சியில் உன்வே கத்தை
முந்திடும் தலைமை யின்கீழ்
இயங்கிடும் ஆட்சி யுண்டு
இதனைநீ உணர்க நன்றே!

—கவிஞர் சாமி. பழனியப்பன்.

## நல்லிதயம் படைத்தோர் அள்ளிக் கொடுத்த நிதி!

## 45 நாளில் 3.67 கோடி ரூபாய்!!

இயற்கையின் கடுமையான சீற்றத்திற்கு ஆளாகி அல்லற்படும் மக்களுக்கு உதவிடுவீர் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர்., அவர்கள் நவம்பர் மாதம் 16-ஆம் தேதி வேண்டுகோள் விடுத்தார்.

நவம்பர் மாதம் 17-ஆம் தேதி முதல் டிசம்பர் 31-ஆம் தேதி வரையான 45 நாட்களில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, 3 கோடியே 67 இலட்சத்து 6 ஆயிரத்து 868 ரூபாய் 91 காசுகளை நல்லிதயம் படைத்தோர் அள்ளிக் கொடுத்துள்ளனர்!

தமிழக முதலமைச்சரின் வேண்டுகோளை ஏற்று, தொடர்ந்து தமிழக மக்கள் மட்டுமல்ல, வெளி மாநில மக்களும் வெள்ள நிவாரண நிதிக்கு அள்ளித் தந்து வருகிறார்கள்.

சமுதாயத்தின் சகல பகுதி மக்களும் பள்ளி மாணவர்களிலிருந்து தொழிலாளர்கள் வரை அனைத்து மக்களும் நிவாரண நிதி வழங்கி வருகிறார்கள்.

## தமிழ்நாட்டில் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நடைபெற்றுள்ள துயர் துடைப்பு—மறுவாழ்வு—சீரமைப்புப் பணிகள்!

(31-12-1977 தேதிய நிலவரம்)

### 1. துயர்துடைப்பு—மறுவாழ்வுப் பணிகள்

1. குடிசை இழந்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கருணை மானியம் — ரூபாய் 9,05,84,000-50

2. வெள்ளத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு வழங் கப்பட்டுள்ள

| | |
|---|---|
| வேட்டிகள் | 4,63,571 |
| புடவைகள் | 4,63,614 |
| இதர துணிகள் | 57,808 |

3. சம்பாதிக்கும் குடும்பத் தலைவரை இழந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கருணை உதவி ரூபாய் 1,03,500

### 2. சீரமைப்புப் பணிகள்

| | | |
|---|---|---|
| 1. | உடைப்புகள் அடைக்கப்பட்டு சீரமைக்கப்பட்ட பாசன ஆதாரங்கள் | 8,106 |
| 2. | செப்பனிடப்பட்ட சாலைகள் | 4,912 |
| 3. | மீண்டும் தொடர்பு பெற்ற தொலைபேசிகள் | 11,183 |
| 4. | பழுதுபார்க்கப்பட்ட மின்சாரக் கம்பங்கள் | 22,261 |

# நூல் நயம்




"தமிழரசு" வாசகர்களின் வேண்டுகோள்களுக்கு ஏற்ப நூல் ஆய்வு என்னும் இப்புதிய பகுதி சேர்க்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் அவ்வப்பொழுது வெளிவரும் புதிய நூல்களைப் பற்றி ஆய்வு செய்து, பயனுள்ள நூல்களைப் பற்றி மட்டும் கருத்துரை வழங்கப்படும்.

## நெல் சாகுபடி

**எழுதியவர் :**

**திரு. எஸ். எஸ். நாகராஜன், எம்.எஸ்ஸி.,**

**அச்சிட்டவர் :** க்ரியா

**விலை :** ரூ. 13—50

**கிடைக்குமிடம் :**
'ஜே' பண்ணை, புதுப்பாக்கம்,
கேளம் பாக்கம்
அஞ்சல்-603103
செங்கற்பட்டு மாவட்டம்.

**த**மிழகத்தில் ஆண்டுதோறும் ஏறத்தாழ 62 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் ஏறத்தாழ 55 இலட்சம் ஏக்கரில் உயர் விளைச்சல் தரும் நெல் ரகங்கள் பயிரிடப்படுகின்றன. உயர் விளைச்சல் தரும் நெல் ரகங்கள் அதிக மகசூலை அளிக்கின்றன என்பதில் உழவர் பெருமக்களுக்கு ஐயமில்லை! என்றாலும், அவைகளை முறைப்படி சாகுபடி செய்யும் முறைகளையும், அறிவியல் நுட்பங்களையும் அறியாததால், பல உழவர் பெருமக்கள் சில ஆண்டுகளாகவே, "நெல் சாகுபடி செய்வது இலாபகரமாக இல்லை" என்று கூறி வருவதுடன், பணப் பயிர் சாகுபடியிலும் ஈடுபட்டுள்ளனர்.

தமிழகத்தின் தலையாய உணவுப் பயிராக விளங்குவது நெல். பெரும்பாலான தமிழக மக்கள் அரிசி உணவையே விரும்புகின்றனர். ஆகவே, நெல் சாகுபடி செய்வது, நாட்டிற்குச் செய்யும் நல்லதொரு தொண்டாகவும் அமைகிறது. இந்த அடிப்படையில் சிந்தித்து, நெல் சாகுபடியில் உள்ள பிரச்னைகளை ஆராய்ந்து, அப்பிரச்னைகளுக்குரிய நல்ல தீர்வுகளை 'உள்ளங்கை நெல்லிக் கனி போல்' திரு எஸ். எஸ். நாகராஜன் அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார். உழவர்களுக்கு உதவும் பயன் மிகு செய்திகளையும், நவீன சாகுபடி முறைகளையும் நாளேடுகள், வார இதழ்கள், மாத இதழ்கள், வானொலி, தொலைக்காட்சி, உழவர் கருத்தரங்கம் ஆகியவற்றின் மூலம் எடுத்துக் கூறி வந்த திரு எஸ். எஸ். நாகராஜன், அவர்கள், **"நெல் சாகுபடி"** என்ற நூலை—இன்றைய நிலையில் அவசரமாகவும், அவசியமாகவும் தேவைப்படும் நல்லதொரு நூலை—எழுதியதன் மூலம் உழவர் சமுதாயத்திற்கு அரியதொரு சேவை செய்துள்ளார் என்றே கூற வேண்டும். ஏனென்றால், ஓரளவுக்கு மட்டுமே படிக்கத் தெரிந்த உழவர்களுக்கு, நெல் சாகுபடியைப் பற்றிய நவீன நுட்பங்களைத் தெரிந்து கொள்வதற்கு இது வரை தமிழில் ஒரு நூல் இல்லாதிருந்தது. அந்தக் குறையை அகற்றியுள்ளார் திரு எஸ். எஸ். நாகராஜன்.

இந்த நூலில், பல்வேறு அறிவியல் நுட்பங்களை எளிய நடையில் விளக்கியுள்ளதுடன், ஆங்காங்கே அழகிய புகைப்படங்களையும், அரிய பழமொழிகளையும் சேர்த்து கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் வெளியிட்டுள்ளார்.

நெல் சாகுபடி செய்யும் உழவர் பெருமக்கள் அனைவரும் அவசியம் படிக்க வேண்டிய நூல் இது என்றால் மிகையாகாது!


"மிகத் தெளிவுடனும், துல்லியமாகவும் எழுதப்பட்டிருக்கும் இப்புத்தகம் விவசாயிகள், மாணவர்கள், விஸ்தரிப்புப் பணியாளர்கள், நெல் சாகுபடியில் உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் ஆர்வமுள்ள அனைவருக்கும் மிகப் பயன் தருவதாக இருக்கிறது" என்று **இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் தலைமை இயக்குநர் டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன்** அவர்கள் "நெல் சாகுபடி" நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். இந்நூலின் பெருமையை விளக்குவதற்கு இதை விட வேறு ஒரு சான்று தேவையில்லை!

**— ஆர். மாணிக்கம்**


[நூல் ஆய்வு செய்வதற்கு நூலின் ஆசிரியர்கள் அல்லது வெளியீட்டாளர்கள் 2 பிரதிகளை "ஆசிரியர், தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை—600 002" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்].

| | |
|---|---|
| முதல் முழுநீள மௌனப் படம் | கீசக வதம் |
| முதல் தமிழ் பேசும்படம் | காளிதாஸ் |
| முதல் முழுநீள நகைச்சுவைப்படம் | மட சாம்பிராணி |
| முதல் முழுநீள கேவா கலர் படம் | அலிபாபாவும் 40 திருடர்களும் |
| முதல் 70 எம்எம் படம் | ராஜராஜ சோழன் |
| குழந்தைகள் நடித்த முதல் படம் | விமோசனம் |
| முதன்முதலில் அதிகச் செலவில் தயாரித்த தமிழ்ப் படம் | மாத்ருபூமி |
| முதல தமிழ் டப்பிங் படம் | ஹரிச்சந்திரா (பிரஹதி) |
| முதல் டெக்னிகலர் தமிழ் டப்பிங் படம் | நீலக்கடல் |
| ஜனாதிபதி பரிசு பெற்ற முதல் படம் | மலைக்கள்ளன் |
| முதன்முதலில் அதிக வாரங்கள் ஓடிய படம் | ஹரிதாஸ் (145 வாரங்கள்) |
| முதன்முதலில் தயாரிக்கப்பட்ட மலையாளப் படம் | பாலன் |
| முதன்முதலில் தயாரிக்கப்பட்ட இந்திப் படம் | பிரேம் சாகர் |
| முதன்முதலில் தயாரிக்கப்பட்ட ஆங்கிலப் படம் | ஜங்கிள் |
| தமிழில் டெக்னிக் கலரில் வெளியிடப்பட்ட முதல் படம் | வீரபாண்டிய கட்டபொம்மன் |
| உலகப் புகழ்பெற்ற முதல் தமிழ்ப்படம் | சந்திரலேகா |
| சென்னையில் தயாரான முதல் தமிழ்ப்படம் | ஸ்ரீனிவாச கல்யாணம் |
| முதல் கதாநாயகி & முதல் பெண் டைரக்டர் | டி. பி. ராஜலட்சுமி |
| முதல் பெண் ஒலிப்பதிவாளர் | திருமதி ஏ. நாராயணன் |
| முதல் பெண் இசை அமைப்பாளர் | ரமணி |
| முதல் பெண் ஆர்ட் டைரக்டர் | மோகனா |
| சென்னையில் முதல் நிரந்தரத் திரையரங்கு | கெயிட்டி |
| ஆடல், பாடல் இன்றி வெளிவந்த முதல் படம் | அந்த நாள் |
| முதன் முதலில் கார்ட்டூன் படத்தைத் தயாரித்த நிறுவனம் | ஜெமினி ஸ்டுடியோ |
| முதன்முதலில் அதிக வாரங்கள் ஓடிய சமூகப்படம் | பாலயோகினி |
| அதிகமான அளவில் படங்களைத் தயாரித்து வெளியிட்டுள்ள நிறுவனம் | மாடர்ன் தியேட்டர்ஸ். |

# மறைந்தும் மறையாத நட்சத்திரங்கள்!







1. தமது பாட்டுத் திறமையால் திரையுலகத்தில் பெரும்புகழ்பெற்ற ஏழிசை மன்னர் எம். கே. தியாகராஜ பாகவதர்.

2. நடிப்புத் திறமையால் பல்லாயிரக்கணக்கான ரசிகர்களைத் தேடிக்கொண்ட நடிப்புச்சுடர் பி. யு. சின்னப்பா.

3. நகைச்சுவையுடன் சீர்திருத்தக் கருத்துக்களைத் திரைப்படத்தில் கலந்து வழங்கிய கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்.

# திரைப்படத் தொழில் செழிக்க உதவும் நிறுவனங்கள்

### திரைப்பட விழாவுக்கு தனியொரு இயக்ககம்

திரைப்பட விழாவுக்கென்றே தனியொரு இயக்ககம் (Directorate of Film Festivals) மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சகத்தின்கீழ், 1973-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இந்த இயக்ககம் பின்கண்ட 3 பணிகளைச் செய்து வருகிறது.

1. கலாச்சார ஒப்பந்த அடிப்படைத் திட்டத்தின்கீழ் அல்லது குறிப்பிட்ட நாடுகளுடன் செய்து கொள்ளும் சிறப்பு ஏற்பாடுகளின்கீழ் அயல்நாடுகளிலும், இந்தியாவிலும் திரைப்பட வார விழா நடத்துதல்.

2. அயல்நாடுகளில் நடைபெறும் திரைப்பட விழாக்களுக்குத் தகுந்த திரைப்படங்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புதல்.

3. நமது நாட்டிற்குள் தேசிய மற்றும் அனைத்து நாட்டுத் திரைப்பட விழாக்களை நடத்துதல்.

இந்தியாவில் நடைபெறும் அனைத்து நாட்டுத் திரைப்பட விழா (போட்டியுள்ளது), அனைத்துநாட்டுப் படத்தயாரிப்பாளர்கள் சங்க இணையத்தினால் முதல்தரமானது என்று மதிக்கப்படும் போட்டிக்குரிய 6 விழாக்களில் ஒன்றாகும். மற்ற 5 விழாக்கள் 'கேன்னீஸ்', 'பெர்லின்', 'சான் செபாஸ்டியன்', 'டெக்ரான்', 'கார்லோவி வாரி' ஆகிய இடங்களில் நடைபெறுகின்றன. இவ்விழாக்கள் மாஸ்கோ திரைப்பட விழாவுடன் ஒவ்வொரு ஆண்டும் மாறிமாறி வருகின்றன.

சென்னையில் நடைபெறவிருக்கும் **'திரைப்பட விழா—'78'** மண்டலத் தலைநகரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள போட்டிக்குரியதல்லாத அனைத்து நாட்டுத் திரைப்பட விழா வகையில் மூன்றாவதாகும். இவ்வகை முதல் விழா 1975 இல் கல்கத்தாவிலும், இரண்டாவது விழா 1976-ல் பம்பாயிலும் திரைப்படவிழா இயக்ககத்தால் நடத்தப் பெற்றது.

### இந்தியத் திரைப்பட ஏற்றுமதிக் கழகம்

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ், 1963-ஆம் ஆண்டில், இந்தியத் திரைப்பட ஏற்றுமதிக் கழகம் (The Indian Motion Pictures Export Corporation) நிறுவப்பெற்றது. இக்கழகம் இந்தியத் திரைப்படங்களின் ஏற்றுமதியை ஊக்குவித்து, திரைப்படக் கள்ளக் கடத்தலைத் தவிர்க்கிறது. இக்கழகம் பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடுகள், வளைகுடா நாடுகள், கிழக்கு ஆப்பிரிக்கா, வட ஆப்பிரிக்கா, மேற்கு ஆப்பிரிக்கா, மோரிஸ் தீவு, மேற்கு இந்தியத் தீவுகள், பிஜி, இந்தோனேஷியா, சிங்கப்பூர், தாய்லாந்து, ஈரான் முதலிய நாடுகளுக்கு இந்தியத் திரைப்படங்களை ஏற்றுமதி செய்து வருகிறது. பெரு, ஈக்குவாடர், கொலம்பியா, பொலிவியா, லேட்டின் அமெரிக்கா நாடுகளுக்கு இந்தியத் திரைப்படங்களை ஏற்றுமதி செய்யும் முயற்சியில் இக்கழகம் வெற்றி பெற்றுள்ளது. இந்தியத் திரைப்பட ஏற்றுமதிக் கழகம், பர்மா, ஈராக், ஆப்கானிஸ்தான், ஓமான், மாலத்தீவு, சோவியத் ரஷ்யா, நேப்பாளம், மொசம்பிக், அல்ஜீரியா ஆகிய நாடுகளின் அரசு இறக்குமதி-விநியோக ஏஜென்சிகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இத்தகைய ஒப்பந்தங்களின் கீழ் இந்தியத் திரைப்படங்களை மேற்கூறிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் மொத்த வினியோகஸ்தராக இக்கழகம் விளங்குகிறது.

பம்பாயில் 1976-ஆம் ஆண்டிலும், புதுடில்லியில் 1977-ஆம் ஆண்டிலும் நடைபெற்ற அனைத்து நாட்டுத் திரைப்பட விழாவில், திரைப்பட மார்க்கெட்டுகளை அமைத்த இக்கழகம், சென்னையில் நடைபெறும் திரைப்பட விழாவிலும் திரைப்பட மார்க்கெட்டுகளுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

### திரைப்பட நிதிக் கழகம்

திரைப்பட நிதிக் கழகம் (Film Finance Corporation) 1961-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இக்கழகம், ஆரம்ப காலம் முதல் குறைந்த செலவில் தயாரிக்கப்படும் கலையம்சம் மிக்க திரைப்படங்களுக்கே நிதியுதவி அளித்து வருகிறது. இத்தகைய திரைப்படங்களுக்கு மார்க்கெட் வாய்ப்புக் குறைவாகவே இருப்பதால், திரைப்பட நிதிக் கழகம் நல்ல சினிமாக்களை உற்பத்தி செய்வதற்கும், திரைப்படங்களின் மேம்பாட்டிற்கு மீண்டும் பயன்படுத்தும் வகையில் வருவாயைப் பெருக்குவதற்கும் 1976-ஆம் ஆண்டில் புதிய யுக்திகளை உருவாக்கியது. 1961-ஆம் ஆண்டு முதல் 105 படங்களுக்கும், 40 'டாக்குமெண்டரி'ப் படங்களுக்கும் இக்கழகம் நிதியுதவி செய்துள்ளது.

திரைப்பட நிதிக் கழகத்தின் நிதியுதவி பெற்றுத் தயாரிக்கப்பட்டு பரிசுபெற்ற படங்களில் 1. ஞானசுந்தரி, 'நோ ஹார் சான்சார்' (குஜராத்தி-1972), 'மாயா தர்பான்' (இந்தி), சுயம்வரம் (மலையாளம்), பைலட் பீரட் (வங்காளம்), துவைதா (இந்தி), 'ஹர்ம் ஹாவா' (இந்தி), '27-டவுன்' (இந்தி), 'ரிட்விக் கதாக்' கின் 'ஜுக்தி', 'டாகா அவுர் கப்போ' (1974) ஆகியவை முக்கியமானவைகளாகும்.

மண்டல திரைப்படங்களை மேம்படுத்துவதற்காக, திரைப்பட நிதிக் கழகம் அண்மையில் கல்கத்தா, சென்னை ஆகிய இரு இடங்களிலும் திரைப்படக் கதைக்குரிய குழுவை அமைத்துள்ளது.

திரைப்பட நிதிக் கழகம் 1973ஆம் ஆண்டு முதல் திரைப் படங்களை இறக்குமதி செய்து வருகிறது. இதற்குப் பின்பு 'MPEAA' எனப்படும் அமெரிக்க நாட்டு மோஷன் பிக்சர்ஸ் ஏற்றுமதி சங்கமே (Motion Pictures Export Association of America) அயல்நாட்டுப் படங்களை இறக்குமதி செய்யும் முக்கிய நிறுவனமாக விளங்கியது.

திரைப்பட நிதிக் கழகம் இறக்குமதி செய்த படங்களில் இந்திய ரசிகர்களை மிகவும் கவர்ந்த திரைப்படங்களாவன :


1. 'கிரேசி பாய்ஸ்' தொடர்கள் (பிரான்ஸ்)
2. 'ஹண்டிங் ஃப்ளைஸ்' (போலந்து)
3. 'மர்டர் ஆன் தி ஓரியண்ட் எக்ஸ்பிரஸ்' (யூ.கே.)
4. 'ரெய்ட் ஆன் எண்டெபி' (யு.எஸ்.ஏ)

அண்மையில் இக்கழகம், வணிக ரீதியில் இயங்காத திரைப்படச் சங்கங்களுக்காகவும், பல்கலைக் கழக மனமகிழ் மன்றங்களுக்காகவும் புகழ் பெற்ற இலக்கியப் படங்களை இறக்குமதி செய்யத் தொடங்கியது. கச்சா ஃபிலிம்களை இறக்குமதி செய்து விநியோகித்தல், திரைப் படங்களை வெளிநாடுகளில் திரையிடுவதற்குரிய வழியினைக் காணுதல், குறிப்பாகக் குறைந்த செலவுத் தியேட்டர்களை ஊக்குவித்தல், குறைந்த வரவு-செலவுத் திட்டத்திற்கு வழி வகை காணுதல் போன்ற துறைகளிலும் இக் கழகம் ஈடுபாடு கொண்டுள்ளது.

## இந்தியத் திரைப்பட இணையம்

திரைப்படத் தொழிலுக்கு உரிய ஒரு பொதுவான அமைப்பாகவும் — சிறப்பாக மத்திய அரசுடன் திரைப்படத் தொழிலின் உறவு சுமுகமாக அமைய உதவும் அமைப்பாகவும்—இந்தியத் திரைப்பட இணையம் (Film Federation of India), 1951-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. ஒரு சில திரைப்படச் சங்கங்கள் தவிர்த்து, இந்த நாட்டில் உள்ள மற்ற எல்லாத் திரைப்படச் சங்கங்களும் இவ்விணையத்தில் உறுப்பினர்களாக உள்ளன. திரைப் படத் தொழிலில் முக்கியமானவர்களாக விளங்கிய திரு மெகபூப் கான், திரு சாந்தி லால் ஷா, திரு எஸ். எஸ். வாசன், திரு பி. என். சர்கார் போன்றவர்கள் பல்வேறு காலங்களில் இந்த இணையத்தின் தலைவர்களாக இருந்துள்ளனர். சிறு சிறு பிரச்சினைகளை உறுப்பினர் சங்கங்களுக்கு விட்டுவிட்டு, திரைப் படத் தொழிலைப் பாதிக்கும் பெரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இவ்விணையம் முயற்சிக்கிறது. திரைப்படத் தொழிலின் பல்வேறு அம்சங்களைக் குறித்து ஆய்ந்து, அவ்வாய்வின் முடிவினை அரசுக்கு அறிவிக்கவும், திரைப்படத் தொழிலில் உள்ள பிரச்சினைகளுக்கு நல்ல முடிவு எடுப்பதற்கு ஏதுவாக அமையவும், 'திரைப்பட மேம்பாடு—நிர்வாகக் குழு' ஒன்றை இவ்விணையம் அண்மையில் அமைத்துள்ளது.

இந்தியத் திரைப்பட இணையம் தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபையுடன் சேர்ந்து **"1978-ஆம் ஆண்டின் திரைப்பட விழா கருத்தரங்கை"** ஏற்பாடு செய்துள்ளது.



## தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை :

திரைப்படத் தொழிலின் முக்கிய பிரிவுகளான ஸ்டூடியோக்கள், தயாரிப்பு, விநியோகம், திரையிடுதல் போன்றவற்றிற்காக உரிமைக் குரல் எழுப்பவும், அவைகளின் நலன்களைக் காப்பதற்காகவும் 1939-ஆம் ஆண்டில் தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபை (South Indian Film chamber of Commerce) நிறுவப்பட்டது. ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளா, தமிழ்நாடு ஆகியவற்றின் திரைப்பட வர்த்தக சபைகள் அனைத்தும் இவ்வர்த்தக சபையுடன் இணைக்கப் பெற்றுள்ளதால், இது ஒரு கூட்டமைப்பாகும். திரைப்படத் தொழில் தொடர்பாக இந்திய அரசினாலும், அதுபோல் மாநில அரசினாலும் அமைக்கப்படும் எல்லாக் குழுவிலும் தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபைக்குப் பிரதிநிதித்துவம் உண்டு. இச் சபையில் 1,838 உறுப்பினர்கள் உள்ளனர். உறுப்பினர்களில் ஸ்டூடியோ உரிமையாளர்கள், தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், திரையிடுபவர்கள், இணைப்பு நிறுவனத்தினர்கள் ஆகியோர் அடங்கியுள்ளனர். அவர்களில் 1,393 பேர் தென்னிந்தியத் திரைப்படங்களின் தயாரிப்பாளர்கள். திரைப்படத் தொழிலில் உள்ள 'எக்சைஸ்' வரி, கேளிக்கை வரி, இறக்குமதி வரி, தணிக்கை போன்றவற்றில் உள்ள பிரச்சினைகளைப் பற்றி அவைகளைத் தீர்த்து வைக்கும் அதிகாரம் பெற்றுள்ளவர்களிடம் எடுத்துக் கூறியுள்ளது. மேலும், இச் சபை உறுப்பினர்களுக்காக, ஸ்டூடியோக்களுக்கான பல்புகள், காந்த நாடாக்கள், இரசாயனப் பொருள்கள், திரைப்படக் கருவிகள் போன்றவற்றை இறக்குமதி செய்து வருகிறது. இறக்குமதி செய்யப்பட்ட கச்சாப் பொருள்களை, முறையாக விநியோகிப்பதற்காக, அரசினால் அமைக்கப்பட்ட கச்சாப் பொருள் ஆலோசனைக் குழுவில் இவ் வர்த்தக சபை 1967-ஆம் ஆண்டு முதல் அங்கம் வகித்து வருகிறது.

தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபை, திரைப்படப் பயிற்சி நிறுவனம் ஒன்றையும் நடத்தி வருகிறது.

—ஆர். எம்.

# 1978-ஆம் ஆண்டில் அரசு விடுமுறை நாட்கள்

தமிழ்நாடு அரசு, 1978-ஆம் ஆண்டில் பின்கண்ட நாட்களைப் பொது விடுமுறை நாட்களாக அறிவித்துள்ளது :

| | | |
|---|---|---|
| ஜனவரி 13, (வெள்ளி) | ... | போகி. |
| ஜனவரி 26, (வியாழன்) | ... | குடியரசு நாள் விழா |
| பிப்ரவரி 21, (செவ்வாய்) | ... | மிலாடி—நபி. |
| மார்ச்சு 24, (வெள்ளி) | ... | தூய வெள்ளி. |
| ஏப்ரல் 14, (வெள்ளி) | ... | தமிழ்ப் புத்தாண்டு நாள். |
| மே 1, (திங்கள்) | ... | மே நாள். |
| ஜூன் 30, (வெள்ளி) | ... | அரையாண்டு வங்கிக் கணக்கு முடிக்கும் நாள். |
| ஆகஸ்ட் 15, (செவ்வாய்) | ... | விடுதலை நாள். |
| செப்டம்பர் 6, (செவ்வாய்) | ... | ரம்சான். |
| செப்டம்பர் 5, (புதன்) | ... | விநாயகர் சதுர்த்தி. |
| அக்டோபர் 2, (திங்கள்) | ... | மகாத்மா பிறந்த நாள். |
| அக்டோபர் 10, (செவ்வாய்) அக்டோபர் 11, (புதன்) | ... | ஆயுத பூஜை. |
| அக்டோபர் 30, (திங்கள்) | ... | தீபாவளி. |
| டிசம்பர் 12, (செவ்வாய்) | ... | மொகரம். |
| டிசம்பர் 25, (திங்கள்) | ... | ஏசுகிறிஸ்து பிறந்த நாள். |
| டிசம்பர் 30, (சனி) | ... | அரையாண்டு வங்கிக் கணக்கு முடிக்கும் நாள். |

குறிப்பு: புத்தாண்டு நாள் (1.1.1978), திருவள்ளுவர் நாள் (15.1.1978) ஞாயிற்றுக் கிழமைகளில் வருகின்றன. பொங்கல் (14.1.1978), தெலுங்குப் புத்தாண்டுப் பிறப்பு நாள் (8.4.1978), 'பக்ரித்' (11.11.1978) ஆகியவை இரண்டாம் சனிக்கிழமைகளில் வருகின்றன. எனவே, இந்த நாட்கள் மேற்கண்ட விடு முறை நாட்கள் பட்டியலில் இடம் பெற வில்லை.

ஜூன் 30, 1978 (வெள்ளி), டிசம்பர் 30, 1978 (சனி), ஆகிய இருவிடுமுறை நாட்கள் வங்கிகளுக்கு மட்டுமே.

1978-ஆம் ஆண்டில் எல்லா இரண்டாம் சனிக் கிழமைகளும், மகாவீரர் ஜெயந்தியை முன்னிட்டு ஏப்ரல் 21, 1978 வெள்ளிக்கிழமையும் அரசு அலுவல கங்களுக்கு விடுமுறை நாட்களாகும்.

# சென்னையில் முதல் தமிழ்ப்படம்!

சென்னை நகரில் 1931-ஆம் ஆண்டு திரைப்பட உலகில் புதியதோர் சகாப்தம் தோன்றியது.

பிறமொழியில் பேசும் படங்கள் சிலவற்றைப் பார்த்தும் படங்களிலே பேச்சையும் பாடல்களையும் கேட்டு வந்த சினிமா ரசிகர்கள், உலக மொழிகளிலே முதன் முதலாகத் தோன்றியதும், இயல், இசை, நாடகம் என்ற முப்பெரும் கலைகளையும் கொண்டதுமான தமிழில், பேசும் திரைப்படங்கள் என்று வருமென்று ஏங்கிக் கொண்டிருந்தனர். முதன் முறையாக ஒரு தமிழ்ப்படம் வெளிவருவதைக் காணத் துடித்தார்கள்!

சிறு குழந்தையிலிருந்து பெரும் கிழவர்கள் வரை அந்நாளை எதிர் பார்த்தனர். வரப்போகும் தமிழ்த் திரைப்படத்தைப் பற்றி சென்னை நகரமெங்கும் மட்டுமல்ல பட்டி, தொட்டி முதற் கொண்டு அங்கும்-இங்கும்-எங்கும்-சந்தும்-பொந்தும்-மாடம்-மாளிகை-குடிசை-கடைகள் ஆகிய எல்லா இடங்களிலும் பேச்சாக இருந்தது.

புதிய படத்தைக் கண்டு மகிழ சாரி சாரியாக மக்கள் சென்றார்கள். குடந்தை மகாமகத்தைப் போன்று பெரும் கூட்டம் சினிமா கொட்டகையின் வாயிலிலே கூடியது! சீட்டை முண்டியடித்துக் கொண்டு வாங்கினார்கள்.

பிறமொழிப் படங்கள் போலல்லாது, தென்னிந்தியப் படத் தயாரிப்பாளர், இந்தியக் கவிஞர்களில் பெரும் பேரும், புகழும் பெற்ற காளிதாஸின் காவியத்தைத் தமிழிலே பேசும் பொற் சித்திரமாக்கினர். இப்படத்தில் டி. பி. ராஜலட்சுமி கதாநாயகியாகத் தோன்றி நடித்தார். இவர் திரைப்பட வெள்ளி விழாவில் விருது பெற்றார், முதன் முதலில் நடித்தமைக்காக! அக்காலத்தில் திரைப்படம் தயாரிக்கப்பட்ட பாடு சொல்லி முடியாது! பெரும் பாடுபட்டு இத் திரைப்படத்தைத் தயாரித்துத் திரையிட்டனர்.

ஆதாரம்: 'தமிழகத் திரைப் பட வரலாறு'.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.

# மதுவை ஒழித்து மகிழ்ச்சி நிலவச் செய்வோம்!





"சாராயம் நம் உடலையும்,
நடத்தையையும், அறிவையும்
பாழாக்குகிறது!"

"மலேரியா முதலிய நோய்கள் உடலை
மட்டுமே பாதிக்கும்; மது பானங்களும்,
கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும்
பாதிக்கும்."

— அண்ணல் காந்தியடிகள்

"மதுவிலக்கு இல்லையேல்
அரிசனங்களுக்கும்,
விவசாயத் தொழிலாளர்களுக்கும்
விமோசனம் இல்லை!"

— பேரறிஞர் அண்ணா



வெளியீடு :—
இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

தமிழரசு



''ஜூவிஷ் காச்சோஸ்'' (Jewish Gauchos) என்னும்

பதிவு எண். M. 8676